JESUS REDEEMS MINISTRIES

வாலிபர் உலகம்

மலர் 10 | இதழ் 4 | ஜூலை 2019
தனிப்பிரதி ₹ 10 | ஆண்டு சந்தா ₹100

வேண்டுதல்

ஜெபம் ஒரு வல்லமையான ஆயுதம்,
அதை பரிசுத்தத்தோடு பயன்படுத்துவோர் அதின் பலனை பெறுவர்

வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

உள்ளே...

Pg. no.6
ஒளியாய் வந்தார்

Pg. no 10
உணர்வுகள்

Pg. no. 20
உங்களிடத்தில் வருவேன்

Pg. no. 26
விசுவாச வாழ்க்கை

Pg. no. 30
வேண்டுதல் கேட்பவர்

இப்பத்திரிகையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whatsapp மூலமாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!
9750955547

ஆசிரியர்: **மோகன் சி. லாசரஸ்**

இணை ஆசிரியர்: **அவினாஷ்**

ஆசிரியர் குழு: **ரெக்ஸ் கிளமென்ட் | பிரிசில்லா பால் | ஜிஷ்யா | ஜான் இராஜேந்திரன் | லீனா அவினாஷ் | ரெபேக்கா | ரேச்சல் | கிளாடிஸ் | ரவி | ஜாஸ்மின்**

வடிவமைப்பு: **ஜாஷ்வா**

Mo / Cheque / DD : “Jesus Redeems Youth Ministry” என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும்.

வாலிபர் உலகம் பத்திரிகை சந்தா மற்றும் வாலிபர் ஊழியத்திற்கு நீங்கள் அனுப்பும் காணிக்கைகளை நாலுமாவடி முகவரிக்கு “வாலிபர் ஊழியம்” என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

எங்களது முகவரி:
இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211. Phone: 04639-220022. | Cell:9750955547
youth@jesusredeems.org |www.jesusredeems.com | www.youthworld.in

தலைவாசல்

அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

ஜெபம் என்றால் அநேகருக்கு நினைவுக்கு வருவது தானியேல், எஸ்தர். ஆனால் இன்றைய காலகட்டத்திற்கு தேவை ஒரு தெளிவான ஜெபம். ஜெபம் ஒரு கூர்மையான ஆயுதம் போன்றது அதை சரியாக, சரியான நேரத்தில் பிரயோகிக்க வேண்டும்.

ஒரு மனிதனின் ஜெபத்தில் கரிசனை இருந்தது, கண்ணீர் இருந்தது, திட்டம் இருந்தது, ஞானம் இருந்தது, வைராக்கியம் இருந்தது. அப்படிப்பட்ட ஜெபத்தை தேவன் இன்றைக்கும் எதிர்பார்த்து நிற்கிறார்.

யார் அந்த மனிதன்? சிறந்த தலைவனாகிய நெகேமியா அவன் ஜெபத்தில் சுயநலமில்லை, பெருமையில்லை, பொறாமையில்லை, கசப்புமில்லை, கவலையும் இல்லை. தேவன் தன்னிடம் உள்ள வேதனையை நெகேமியாவிடம் தெளிவாக தெரிவிக்கின்றார். பின்னர் தான் செய்ய வேண்டிய செயலை தேவனிடமிருந்து திட்டமாக பெறுகின்றார். நெகேமியா அதை பின்னர் செயல்படுத்துகிறார். ஒருவரின் ஜெபம் தேவனிடத்தில் சீராக இருந்தால், குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் தேவன் செய்ய நினைக்கும் அத்தனை திட்டங்களும் தெளிவாக நடக்கும்.

இன்றைக்கு தேவனுடைய இருதயத்தில் உள்ள பாரங்களை நமக்கு திட்டமாக தருகிறார். அதை பெற்றுக்கொண்ட நாம் ஜெபிக்கின்ற நபராக இருந்தால் மட்டுமே அந்த திட்டத்தை செயல்படுத்த முடியும். ஏனென்றால் தேவனுடைய திட்டத்தை நாம் செயல்படுத்தாதபடி சாத்தான் பல தடைகளையும், பல சதிகளையும் செய்வான். அவற்றை மேற்கொள்ள நம் ஜெபம் அவசியம்.

இன்றைய சூழலில் ஞானம் உள்ள, திறமையுள்ள தலைவர்கள் உண்டு. ஆனால் ஜெபம் இல்லை என்றால் அவர்களால் சிறப்பாக செய்ய முடியாது.

ஒவ்வொரு அசைவிலும் அவர்களின் பணி தடையாகவும், பலனில்லாத பணியாக மாற வாய்ப்பு உண்டு. ஒரு தலைவனின் இருதயத்தில், தரிசனம், கரிசனம், அன்பு, தாழ்மை, புரிந்துகொள்ளுதல் போன்ற பல பரிமாணங்கள் இருக்க வேண்டும். அப்பொழுது தான் அவன் திறமையாக தன்னோடு தோள் கொடுக்க ஆட்களை திரட்டிக் கொண்டு போக முடியும். இவை அனைத்தும் இருந்தும் அந்த தலைவன் ஜெபிக்கின்ற தலைவனாக இருந்தால்தான் அவரின் அனைத்து திட்டங்களும் எளிதில் நிறைவேறும். ஜெபம் என்ற அந்த பகுதி காணப்படாவிட்டால் நடத்தி செல்வது மிகவும் கடினம். உங்களால் உடன் வேலை செய்பவர்களை புரிந்துகொள்ள இயலாது. கருத்து வேறுபாடுகள், குழப்பம் மட்டுமே மிஞ்சும்.

எனவே, தேவன் தேடும் ஒரு தலைவன் திறமையாக மட்டுமல்ல, ஜெபிக்கின்ற தலைவனாக இருந்தால் மாத்திரமே தேவ பணியை துரிதமாய் செய்து முடிக்க முடியும்.

ஜெபிக்காத தலைவன் திறமை வாய்ந்தவனாக இருந்தாலும் திட்டங்கள் பல வகுத்தாலும், அவை அனைத்தும் ஸ்தம்பிக்கவோ அல்லது பலன் இல்லாமல் போகவோ வாய்ப்பு உண்டு.

தேவன் தேடும் தலைவன் நீங்களாக இருக்கலாம், ஆனால் நெகேமியா போன்ற ஒரு ஜெபிக்கின்ற தலைவன் தேவன் தேடும் நபர். நீ எழும்பினால் அலங்கம் கட்டப்படும், தேசம் பாதுகாக்கப்படும்.

அநேக வாலிபர்கள் தங்கள் திறன்களை வளர்த்துக் கொள்ள விரும்புகிறார்கள். எல்லாவற்றிலேயும் தன்னை Update செய்ய வேண்டும் என்று யோசிக்கிறார்கள். ஆனால் தேவனுடைய பணியை செய்ய தேவன் எதிர்பார்க்கும் Qualification ஜெபம்! அந்த ஜெபத்தில் வாலிபனாகிய உன் நிலை என்ன? ●

கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்

ஆலோசனை

அவி

Heart Beat

நான் ஒரு சிறிய கிராமத்தில் பிறந்து வளர்ந்தேன். 12ம் வகுப்பில் 545 மதிப்பெண்கள் பெற்றேன். கல்லூரியில் படிக்க வேண்டுமென்று ஆசைபடுகிறேன். ஆனால் எங்கள் கிராமத்தில் வசதி இல்லை. பட்டணத்தில் படிக்க ஆசை. ஆனால் அங்குள்ள கலாச்சாரம், பழக்கவழக்கம் எனக்கு தெரியாது என்பதால் என் வீட்டில் அனுப்ப பயப்படுகிறார்கள். என்னுடைய கல்லூரி படிப்பு ஒரு கனவாகவே கலைந்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது. என்னுடன் படிக்கும் சக தோழிகள் பலர் பலவிதமான கம்பியூட்டர் கோர்ஸ் படிக்கிறார்கள். பல கோச்சிங் சென்டர் சென்று தங்கள் அறிவுத்திறனை வளர்த்து கொள்கிறார்கள். எனக்கு படிக்க ஆசை தான். ஆனால் என் பெற்றோர் முட்டுக்கட்டை போடுகிறார்கள். கல்லூரி பற்றி பேச்சை எடுத்தால் எரிச்சலடைகிறார்கள். கோபப்படுகிறார்கள். நன்றாக படித்து என் கனவை நிறைவேற்றி பெற்றோரின் பெயரை உயர்த்துவது என் கனவு. ஆனால் என் கனவு என்ன ஆகும் என்று மனம் குழம்பி போய் இருக்கிறேன். என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை. எனக்கு ஆலோசனை சொல்லுங்கள்!

– கனகா, பொறையூர்.

அன்பு தங்கை கனகா! உங்களின் உள்ளான வேதனை, பயம். மேலும் கல்லூரி படிப்பு என்ன ஆகும் என்ற கவலை அனைத்தும் புரிகிறது. கனகா இது மனம் குழம்ப வேண்டிய நேரம் அல்ல, மனம் தெளிவாய் இருக்க வேண்டிய காலம். உங்களின் பெற்றோர் உங்களுடைய உயர் படிப்புக்கு முட்டுகட்டையாக இருப்பது உங்களின் கோபம். ஆனால் அவர்கள் படிப்புக்கு போடும் தடையை சற்று ஆராய்ந்து பார்த்தால், உண்மையான காரணம் புரியும். அவர்கள் பயப்படுவது எதற்காக என்று யோசித்துப் பாருங்கள். நீங்கள் எப்படி அங்குள்ள சூழ்நிலைகளை சமாளிக்க முடியும். உங்களால் எப்படி அங்கு உங்கள் கலாச்சார பழக்கத்தை மேற்கொள்ள முடியும் என்ற பயம் தான் பெற்றோரின் உள்ளத்தில் ஓங்கி நிற்கும். மேலும் பெற்றோரின் அடிவயிற்றில் புளியை கரைப்பது போன்று தான் ஒவ்வொரு நாளும் செய்திதாளில் செய்திகள் வருகின்றது. பெற்றோரை பொறுத்தவரை முதாவது பெண் பிள்ளையின் பாதுகாப்பு தான் முக்கியம். பிறகு தான் படிப்பு, பட்டம், பதவி எல்லாமே.

உங்கள் பெற்றோரின் உள்ளான அழுத்தம் தான் கல்லூரியை பற்றி பேசும்போதேல் லாம் எரிச்சலாக, கோபமாக வெளிப்படுகிறது.

எனவே கனகா! முதலில் நீங்கள் எங்கு படிக்க வேண்டும், என்ன படிக்க வேண்டும், எவ்வளவு ஆண்டு, அந்த பட்டணத்தின் தற்போதைய சூழ்நிலை என்ன, படிப்பின் கட்டணம் எவ்வளவு, கலாச்சார மாற்றம் என்ன, படித்தபின் என்ன செய்ய போகிறீர்கள் போன்றவற்றை தீவிர ஆராய்ச்சி மேற்கொள்ளுங்கள். பிறகு சேகரித்த அனைத்து

விஷயங்களையும் உங்கள் பெற்றோரிடம் அவர்களுக்கு புரியும் வண்ணம் எடுத்து விளக்கிக் கூறுங்கள். முதலாவது உங்களின் பாதுகாப்பு, பின்னர் படிப்பு, அதன்பின்னர் வேலை போன்ற ஒவ்வொரு படியாக அவர்களுக்கு புரியும் வண்ணம் விளக்குங்கள்.

கனகா! ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளை நன்றாக படிக்க வேண்டும், நல்ல நிலமைக்கு வரவேண்டும் என்றே விரும்புவார்கள்.

கழுகு தன்னுடைய சின்ன குஞ்சுகளை உணவு கொடுத்து பழக்கும். பின்னர் தான் பறக்கும் அளவிற்கு தன் குட்டிகளும் பறக்க வேண்டும் என்று விரும்பும். ஐந்து அறிவு படைத்த கழுகுக்கு அந்த ஆசையும் ஆவலும் இருக்கும்போது உங்களை பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்த பெற்றோருக்கு இருக்காதா!

எனவே சோர்ந்து போகாமல், என் கனவு கலைந்து விடுமே என்று கலங்காமல் உங்கள் கனவை நோக்கி பயணம் செய்ய புறப்படுங்கள். பல தடைகள் உங்களுக்கு வந்தாலும் ஒவ்வொன்றையும் படிக்கற்களாக மாற்ற முயலுங்கள்.

Step to do:

- முதலில் உங்களின் கல்லூரியை பற்றி, அங்கு ஹாஸ்டல் வசதி உள்ளதா போன்ற காரியங்களை விசாரியுங்கள்.

- படிக்கும் படிப்புக்கு ஸழியிற்ள உள்ளதா, அதை முடித்து விட்டு வேலை செய்வீர்களா! அல்லது மேற்படிப்பு படிப்பீர் களா! என்று சீராக முடிவு செய்யுங்கள்.

- படிப்பிற்கான செலவு மற்றும் ஸ்காலர்ஷிப் கிடைக்க வாய்ப்பு உண்டா என்று விசாரியுங்கள். மேலும் first graduate என்றால் அரசாங்க ஸ்காலர்ஷிப் தர வாய்ப்பு உண்டா. இப்படி என்ன சலுகைகள் உண்டா என்று பாருங்கள்.

- கல்லூரி விடுமுறைக்கு வீட்டிற்கு எப்போதெல்லாம் வர வாய்ப்பு உண்டு என்று யோசியுங்கள்.

- மேலும் உங்கள் கிராமத்தில் இருந்து யாராவது அந்த கல்லூரிக்கு விண்ணப்பிக்கிறார்களா என்று விசாரித்து பாருங்கள்.

- இவை எல்லாவற்றிற்கும் மேலாக நான் சென்று ஒழுக்கமாக படித்து முடித்துவிட்டு வேறு தேவையில்லாத எந்த காரியத்திலும் மாட்டிக் கொள்ளாமல் சரியாக படித்து முடித்துவிட்டு, உங்கள் பெயரை காப்பாற்றுவேன் என்று ஒரு உறுதிமொழியை கொடுத்து அதை காப்பாற்ற முயலுங்கள்.

காரணம் கிராமத்தை தாண்டியவுடன், பெற்றோர் கண்ணுக்கு மறைந்தவுடன் தங்கைமார் செய்யும் காரியம் உங்களுக்கே தெரியும்.

நீங்கள் ஒரு எடுத்துகாட்டாக வாழ்ந்து, கிராமத்து பெண்கள் தொடர்ந்து கல்லூரி படிக்கலாம் எல்லா கற்புடனும் வாழ்ந்து காட்ட முடியும் என்று நிரூபித்து, மற்ற பெண்களுக்கு ஒரு வழிகாட்டியாக மாறுங்கள்.

இன்றைக்கு பல தங்கைமார் பட்டணத்தில் கல்லூரி படிக்க சென்றவுடன், சிறகு அடித்து பறக்க முயன்று, இலக்கை இழந்து, குறிக்கோளை மறந்து, தவறான வழிக்கு சென்று வாழ்க்கை இழந்து நிற்பது சகஜமாகிவிட்டது. எனவே சீரான முடிவை தெளிவாக எடுத்து சிறந்த எடுத்துக்காட்டாக இருப்பேன் என்ற உங்கள் பெற்றோருக்கு வாக்குறுதி கொடுங்கள். தேவையில்லாத நட்பு, நெட்வொர்க், சமூக வலைதளங்கள் போன்ற வலைகளில் சிக்க வேண்டாம். கனகா உங்கள் கனவை தொடருங்கள்! வாழ்த்துக்கள்! ●

தொகுப்பு: ஜிஷ்யா

ஒளியாய் வந்தார்

மரகதம்

எனக்கு கண் பார்வை சரியில்லை; எனவே பள்ளியில் சேர்க்க முடியாது, படிக்க முடியாது என்றெல்லாம் மருத்துவர்கள் மற்றும் பள்ளி நிர்வாகம் சொன்னது. இப்படி நம்மோடு பேச ஆரம்பித்தார் சகோதரி மரகதம். பல காரியங்களை நம்மிடம் பகிர்ந்துகொண்டார். அதனை உங்களுக்காக தொகுத்து வழங்குகிறோம்..

உங்களது குடும்பப் பின்னணிப் பற்றி சொல்லுங்களேன்?

என் பெயர் மரகதம், என் தந்தை ஒரு திருச்சபையின் போதகராக உள்ளார், தாய் உடன் ஊழியராக ஊழியம் செய்து வருகிறார். என் சகோதரன் ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார்.

அப்பா, அம்மா போதகரென்றால், உங்க பூர்வீகமே கிறிஸ்த குடும்பமாக இருந்திருக்குமே?

அப்படியில்லை அக்கா, நாங்கள் ஒரு பாரம்பரிய கத்தோலிக்க குடும்பத்தை சார்ந்தவர்கள். ஆனால் என் சகோதரன் வாழ்வில் தேவன் செய்த அற்புதத்தால் அப்பா அம்மா இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள்.

மரகதம் தன் குடும்பத்தாருடன்

உங்களது சிறுபிராயத்தில் நடந்த மறக்க முடியாத சம்பவத்தைப் பற்றி சொல் லுங்களேன்?

எனது 3வது வயதில் என்னை பள்ளியில் சேர்க்கும்படி என் தந்தை அழைத்து சென்றார். அங்கு என்னை கவனித்த ஆசிரியர்கள் உங்கள் பிள்ளைக்கு கண் பார்வை சரியாக தெரியவில்லை எனவே அவளை கண் பார்வை குறையுள்ளவர்களுக்கான பள்ளியில் சேர்த்து படிக்க வையுங்கள் என்று கூறிவிட்டனர். இதைக்கேட்டு அதிர்ச் சியடைந்த என் தந்தை என்னை மதுரையில் உள்ள ஒரு கண் சிகிச்சை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு என்னை பரிசோதித்த மருத்துவர்கள் உங்கள் பிள்ளைக்கு பிறவியிலேயே கண் பார்வை குறைவாக உள்ளது, அவளுக்கு 8 அடி தூரம் தான் கண் பார்வை தெரியும் என்று கூறிவிட்டனர். மூளையிலிருந்து கண்களுக்கு செல்லும் நரம்பு பாதிப்பாக இருப்பதால் சரி செய்வது சாத்தியம் இல்லை என்று கூறிவிட்டனர். மறுநாள் மறுபடியும் அதே பள்ளிக்கு என் தந்தை என்னை அழைத்துச் சென்றார். அங்குள்ள ஒரு ஆசிரியை எங்களுக்காக பேசியதால் பள்ளி நிர்வாகம் என்னை சேர்த்துக் கொண்டது.

ஐயோ! கேட்கவே கஷ்டமா இருக்கு... சரி பள்ளியில் சேர்ந்தீர்கள்.. உங்களால் படிக்க முடிந்ததா?

இல்லை, பள்ளிப் படிப்பு எனக்கு மிகப்பெரிய சவாலாகவே இருந்தது. காரணம் எனக்கு கரும்பலகை தெரிய வேண்டும் என்று ஒரு தனி நாற்காலி செய்து கரும்பலகைக்கு மிக அருகில் அமர வைத்தனர். ஆனாலும் அதில் எழுதப்பட்டிருக்கும் எந்த எழுத்துக்களும் எனக்கு தெரியாது. அனைத்து பாடத்தையும் தவறாக எழுதுவேன். புத்தகத்தையும் மிக அருகில் வைத்து பார்த்தால் தான் என்னால் படிக்க முயலும். இதன் காரணமாக எந்த பாடத்திலும் என்னால் தேர்ச்சி அடைய முடியாமல் போயிற்று. அதுமட்டுமின்றி என் கருவிழிகள் எப்பொழுதும்அசைந்து கொண்டிருப்பதால் உடன் உள்ளவர்களின் கேலி பேச்சுக்கு ஆளாக வேண்டியதிருந்தது. எனினும் பள்ளி நிர்வாகம் என் குறைவை அறிந்து, ஒரு வகுப்பில் இருந்து மற்றொரு வகுப்பிற்கு தேர்ச்சியடைய செய்து அனுப்பி வைப்பார்கள்.

புரியுது! நீங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பீர்களென்று. சரி, உங்களுக்கும் இயேசுவிற்கும் உள்ள தொடர்பு? அவரை எப்பொழுது ஏற்றுக் கொண்டீர்கள்?

எனது 12வது வயதில் ஒரு வாலிபர் கூடுகையில் பங்குபெற்றேன். அப்பொழுது தேவன் என்னை தமது அபிஷேகத்தினால் நிறைத்து இரட்சித்தார். அன்றிலிருந்து இயேசுவை எனது நல்ல நண்பராக ஏற்றுக்கொண்டு எனது பெலவீனத்தில் எனக்கு உதவி செய்யும்படி தினமும் ஜெபித்து வந்தேன். எனினும் படிப்பில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. நாட்கள் கடந்து செல்ல, நான் 10ம் வகுப்பு படிக்கும்போது முன் இருந்ததுபோலவே அனைத்து பாடத்திலும் தோல்வியடைந்து வந்தேன். இதனால் 10ம் வகுப்பு பொது தேர்வில் என்னால் தேர்ச்சி அடைய முடியாது என்ற பயம் என்னை பற்றிக் கொண்டது. மிகுந்த மன அழுத்தத்துடன் காணப்பட்டேன். ஒவ்வொரு நாள் இரவும் அழுது ஜெபித்துக் கொண்டிப்பேன் கர்த்தருடைய பெரிதான கிருபையால் 10ம் வகுப்பில் தேர்ச்சி அடைந்தேன். எனினும் 11ம் வகுப்பில் கணித பாடத்தில் தோல்வியை சந்தித்தேன். மறுதேர்வு எழுதி 12ம் வகுப்பிற்குள் சென்று, 12ம் வகுப்பிலும் தேவன் வெற்றியைக் கொடுத்தார்.

கேட்கவே ஆச்சரியமா இருக்கு... ஒருவழியா பள்ளிப் படிப்பை முடித்தீர்கள்... தொடர்ந்து கல்லூரி படிப்பை தொடர்ந்தீர்களா?

பள்ளி பருவத்தில் தோல்வி நிந்தை அவமானங்களை மட்டுமே சந்தித்து வந்த எனக்கு கல்லூரியிலும் அது தொடருமோ என்ற பயம் இருந்தது. இந்த சூழ்நிலையில் தேவன் தம்முடைய வார்த்தையைக் கொண்டு என்னுடன் பேசினார். நிச்சயமாகவே நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் (எபி.6:14) என்ற வாக்குத்தத்தத்தை விசுவாசிக்க கிருபை செய்தார். அவரை மட்டுமே சார்ந்து வாழ ஆரம்பித்தேன்.
கல்லூரிக்குள் நுழைந்தேன், முதலாம் ஆண்டு முதல் செமஸ்டர் முடிவுகள் வந்தபோது அனைத்து பாடத்திலும் 90% மதிப்பெண்கள் எடுக்க தேவன் கிருபை செய்திருந்தார். என்னால் இந்த காரியத்தை நம்ப முடியவில்லை. அதுமட்டுமின்றி என் வகுப்பில் உள்ள 110 மாணவர்களில் என்னை முதன்மையான மாணவியாக தேவன் உயர்த்தினார். மேலும் ஒரு பாடத்தில் University Rank எடுக்க தேவன் உதவி செய்தார். தொடர்ந்து என் வாழ்வில் அற்புதத்திற்காக ஜெபித்து வந்தேன்.தேவன் என்னை மேலும் இரண்டு டிகிரியை படித்துக் கொண்டே ஒரு பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றவும் உதவி செய்தார்! தேவனுக்கே மகிமை!

இவ்வளவு பெரிய அற்புதம் செய்து உங்களை உயர்த்திய தேவனுக்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

எங்களுடைய சபையில் கைப்பிரதி ஊழியம் மற்றும் இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தில் பகுதி நேர ஊழியமும் செய்து வருகிறேன். தேவன் என் வாழ்வில் செய்த அற்புதங்களை சாட்சியாக பகிர்ந்து வருகிறேன். என்னால் முடிந்த எல்லாவற்றிலும் அவருக்காக ஊழியம் செய்கிறேன்.

உங்களிடம் பேசினது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது மரகதம்! இதை வாசிக்கும் வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

இதை வாசித்துக் கொண்டிருக்கும் வாலிபர்களே, எந்த மனிதனையும் தேவன் உயர்த்துவதற்கு அவர்கள் உடலில் உள்ள குறை ஒரு தடையாக இருக்காது என்பதற்கு என்னுடைய வாழ்க்கை உங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு, நீங்கள் எந்த சூழ் நிலையில் இருந்தாலும் உங்களை உயர்த்த தேவனாலே கூடும். கர்த்தரை மட்டுமே சார்ந்து கொள்ளுங்கள். அவர் உங்களில் மகிமைபடுவார். உங்களையும் மேன்மையாக வைப்பார். ●

பிரியமானவர்களே! கண் பார்வை சரியில்லை, பள்ளியில் சேர்க்க முடியாது என்று பலரும் புறக்கணித்த மரகதத்தை தேவன் இன்று பள்ளி ஆசிரியையாக உயர்த்த தவறவில்லை எப்பொழுது அவர்களுடைய வாழ்க்கையை தேவனுக்காய் அர்ப்பணித்தார்களோ அப்பொழுது தேவனும் அவர்களுடைய வாழ்க்கையில் பல இடங்களில் முதன்மையாக உயர்த்தினார். ஏன் எனக்கு மட்டும் இப்படியானது என்று கேட்பதற்கு பதில், இதிலிருந்தும் தேவனால் என் வாழ்க்கையில் அற்புதம் செய்ய முடியும் என்று அவரை முழுமையாக சார்ந்து, அவரையே நம்பி வாழ்ந்து பாருங்கள். தேவன் உங்களையும் உயர்த்துவதை பார்ப்பீர்கள்!

ரவி

ஜெபமே ஜெயம்

என் அன்புக்குரிய வாலிப சகோதர சகோதரிகளே, நாம் இந்த மாத கட்டுரையில் ஆராய இருக்கும் தலைப்பு "ஜெபம்".

இந்த ஜெபம் என்கிற வார்த்தையை கேட்டிராத கிறிஸ்தவர்களே இருக்க முடியாது. ஜெயமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கு மிகவும் அடிப்படையான தேவைகளில் ஒன்று ஜெப ஜீவியம். முதலில் நாம் ஜெபம் என்றால் என்ன என்று பார்ப்போம். பல கிறிஸ்தவர்களுக்கு இருக்கும் ஒரு கண்ணோட்டம் என்னவென்றால், ஜெபம் என்பது தன்னுடைய தேவைகளின் பட்டியலை தேவனிடத்தில் தெரிவிப்பது. இல்லை, அது ஜெபம் அல்ல, அது ஜெபத்தின் ஒரு பாகமே. மாறாக, ஜெபம் என்பது சர்வ வல்லவரான தேவன்; தாம் தன் பிள்ளைகளோடும், தம் பிள்ளைகள் தம்மோடும் பேசி உறவாடும்படி அளித்திருக்கும் ஒரு மாபெரும் பாக்கியம். நாம் பேசி தேவன் கேட்பது மாத்திரம் போதாது, தேவன் பேசி நாமும் கேட்க வேண்டும்.

ஜெப நேரத்தில் நாம் பல பரிமாணங்களில் தேவனோடு பாவிப்போம். தகப்பனாக, வழிகாட்டியாக, ஆத்தும நேசராக, எஜமானனாக, நம் தேசத்தில் நாம் தினந்தோறும் செயல்படும் சர்வ வல்லவராக, இப்படியாக பல பரிமாணங்களில் நாம் தேவனோடு பேசுவோம். அதேபோல, அவரும் நம்மோடு பேசவும் வழிகாட்டவும் தன் சித்தம் வெளிப்படுத்தவும் மிகவும் ஆவல் கொண்டிருக்கிறார். பல நேரங்களில் நம்முடைய ஜெபங்கள் ஒரு வழிச்சாலையில் போகிற வாகனங்கள் போல; நாம் பேசிக்கொண்டு இருந்து அவர் பேசுவதை கேட்காமலேயே நம் ஜெபத்தை முடித்து விடுகிறோம். அது ஒரு நேச உறவுக்கு அழகல்ல. வேதத்தை பார்ப்போமானால் ஜெபத்துக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர் 2:4ல் "ஜெபம் பண்ணுதலில் உறுதியாய் தரித்திருந்தார்கள் என்றும், ரோமர் 12:12ல் "ஜெபத்தில் உறுதியாய் தரித்திருங்கள்" என்றும் 1 தெசலோனிக்கியர் 5:17ல் "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்று வேதம் அறிவுறுத்துகிறது. நாம் வாழும் இந்த உலகத்தில் நம்மைச் சுற்றிலும் சோதனைகளும், பாலியத்துக்குரிய இச்சைகளும் பிசாசின் தந்திரங்களும், நம்மை மாற செய்யும்படி பதிவிருக்கிறது. பவுல் 2 தீமோத்தேயு 2:22ல் "அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடி..." என்று சொல்கிறார். அவர் சொல்வதுபோல் நம்மை நெருங்கிவரும் பாலியத்தின் இச்சைகளுக்கு நாம் இடம் கொடுக்காமல் இருக்கவேண்டு மென்றால், நாம் ஜெபத்தில் தரித்திருப்பது மிக முக்கியம்.

ஒரு தேவ மனிதர் கீழ்கண்ட வாக்கியத்தை சொல்லி நான் கேட்டிருக்கிறேன், "**பிசாசுக்கு நீ சபை ஆராதனைக்கு போவதோ, நற்செய்தி கூட்டங்களுக்கு போவதோ பெரிய ஊழியம் என்பதோ அவனை கலங்கப்பண்ணாது. ஆனால் தன் முழங்கால்களை முடக்கி அறையை பூட்டிக் கொண்டு தேவாதி தேவனை நோக்கி ஜெபிக்கும் ஒரு சீஷனைக் கண்டு அவன் நடுங்குவான்**" எவ்வளவு உண்மைப் பாருங்கள். ஜெபிக்கிற கிறிஸ்தவனை நெருங்கிவர சாத்தான் யோசிப்பான்.

என் அன்பு தம்பி மற்றும் தங்கையே, தேவன் உங்கள் ஒவ்வொருவருக்கும் பெரிய நோக்கத்தையும் உங்களைக் கொண்டு தன் ராஜ்ஜியத்தையும், சித்தத்தையும் பூமியில் செயல்படுத்தும் திட்டங்களையும் வைத்திருக்கிறார். அத்தகைய நோக்கத்தையும், திட்டங்களையும் நிறைவேற்ற நமக்கு ஆழமான ஜெப ஜீவியம் மிக அவசியம். நீங்கள் விழாமல் ஒரு சாட்சியுள்ள வாழ்க்கை வாழ ஜெபம் மிக அவசியம். ஆகவே இன்றுதானே அவர் திருசமூகத்தில் ஜெபத்தில் தரித்திருக்க உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். அப்படி செய்யும்போது, நீங்கள் தேவனுக்காக பெரும் காரியங்கள் செய்வதை எந்த பிசாசின் வல்லமையாலும் தடை செய்ய முடியாது. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ●

புதிர் ரேச்சல்

வேதாகம புதையல் வேட்டை

கீழே ஜெபத்தைக் குறித்த கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. சரியான பதிலைக் கண்டறிந்து, கட்டங்களை பெயர்களால் நிரப்பி விடையைக் கண்டறிந்து வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்!

	1						6
2							
	8		7				
				3			
				9			
4							
		10					
	5						

15.06.2019

எழுதி அனுப்ப வேண்டிய கடைசி நாள்

கடந்த மாத வெற்றியாளர்
சகோ. ஷைனி, திருநெல்வேலி
அவர்களை வாழ்த்துகிறோம்

கடந்த மாத விடைகள்

1. கைத்தாளம் (1 கொரி.13:1)
2. குழல் (மத்.11:17)
3. தாரை (மத்.6:2)
4. எக்காளம் (1 கொரி.14:8)
5. தம்புரு (யாத்.15:20)
6. எக்காளம் (யோசு. 6:20)
7. சுரமண்டலம் (1சாமு. 16:23)
8. 6 வகை (தானி.3:15)
9. கின்னரம் (சங்.137:2)
10. எக்காளம் (வெளி. 9:1)

மேலிருந்து கீழ்

1. தன் வேலைக்காரனுக்காக ஜெபித்தவன் யார்?

8. எலியாவைத் தவிர, வேதத்தில் ஜெபம்பண்ணி மழை பெய்யப்பண்ணினவன் யார்?

7. தன் சகோதரிக்காக ஜெபித்தவன் யார்?

6. எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தவன் யார்?

9. தன் மனைவிக்காக ஜெபித்தவன் யார்?

இடமிருந்து வலம்

2. தன் முகம் தன் முழங்காலில் பட குனிந்து ஜெபித்த தீர்க்கதரிசி யார்?

3. பலத்த சத்தத்தோடு ஜெபம் பண்ணினவர் யார்?

4. எந்த ராஜாவின் முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டது?

5. ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள் என்றவர் யார்?

10. மனத்தாழ்மையோடு ஜெபித்த புருஷன் யார்?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:
Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 629 211
Cell: 9750955547 | Tel: 04639- 220022.
youth@jesusredeems.org

ஜிஷ்யா

வெறுப்பு

உணர்வுகள்
பகுதி 6

உணர்ச்சிகளைக் கையாளுவது எப்படி?

திடீரென ஒருவரின் வாட்ஸ்அப்பை(Whatsapp)பிளாக்பண்ணியிருக்கீங்களா? அதுவரை நன்றாக பேசிக்கொண்டிருந்த அந்த நபர் சொன்ன ஏதோ ஒரு விஷயம் பிடிக்கவில்லை என்பதால், அவரை ஃபேஸ்புக்கில் பிளாக் செய்து, அவருடைய தொலைபேசி அழைப்புகளையும் தவிர்த்த அனுபவம் இருக்கிறதா? கண்டிப்பாக இருக்கு... ஐயோ ஏன் இவங்ககிட்ட பேசுறோம்! அப்படீன்னு யோசிக்கிற அளவிற்கு சில நபர்கள் உங்க வாழ்க்கையில் இருந்திருப்பாங்க. இந்த நினைவுகளோடு இருந்தால் உடனே போய் நீங்கள் மறுபடியும் நண்பர்களாகி, அந்த கசப்பான நினைவுகளை தூக்கிப்போட்டு பழக ஆரம்பித்தால் ஒரு பிரச்சனையும் இல்லை. ஆனால், அந்த கசப்பான எண்ணங்கள், அந்த நபரிடமிருந்து உங்களை முழுவதுமாக பிரிக்குமானால், அவரைப் பற்றி யோசித்தாலே உங்களையும் அறியாமல் கசப்பு, விரக்தி, கோபம் வந்தால் அந்த உணர்வை தான் ‘வெறுப்பு’ என்று அழைக்கின்றனர்.

விளையாட்டாக ஆரம்பிக்கும் இவ்வுணர்வு நாளடைவில் ஆழமான கசப்பாக வேரூன்றி விடுகிறது. அவர்கள் உங்களுக்கு கொடுத்த தவறான அனுபவங்கள், நேசிக்கிறேன், காதலிக்கிறேன் இப்படி பல வாக்குகள் கொடுத்து உங்களை ஏமாற்றியதினால், எங்கு மறுபடியும் அந்த நபரை ஏற்றுக்கொண்டால், இதே மாதிரி தவறான அனுபவங்களை சந்திக்க வேண்டிய சூழ்நிலை வரபோகிறது என்ற எண்ணம் மூளையில் பதிந்துவிட்டதால், அந்த எண்ணம் நாளடைவில் வெறுப்பாக மாறுகிறது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

வெறுப்பு என்பது இரண்டு முக்கியமான காரியங்களால் தூண்டப்படுகிறது.

1) அன்பு - அளவிற்கு அதிகமான அன்பு இது திடீரென நிறுத்தப்படும்போது வெறுப்பாக மாறுகிறது.

2) பிடிக்காதவற்றை மறுபடியும் மறுபடியும் செய்தால் ஏற்படும் கோபம் வெறுப்பாக மாறுகிறது. அல்லது தீவிரவாதிகள் நமக்கு வேண்டப்பட்டவர்களை தாக்கும்போது அது வெறுப்பாக மாறுகிறது.

தெரிந்துகொள்ளுங்கள்

மூளையில் உள்ள அமிக்டலா (Amygdala) என்ற பகுதியில் இதற்கு முன் நடந்த மோசமான சம்பவங்களை எல்லாம் பதிவு செய்து வைத்திருக்கும். இந்த பகுதி நரம்பியல் மண்டலத்தோடு தொடர்புடையது. எனவே, அந்த மறக்க முடியாத சம்பவத்தை செய்பவரை பார்க்கும்போது உங்களையும் அறியாமல் அமிக்டலாவின் செயல்பாட்டால் வேறு என்ன மோசமான காரியம் செய்யப் போகிறாரோ என்ற பயம் ஏற்படுகிறது. இதுவே மனஅழுத்தத்திற்கும் கோபமான வெறுப்பிற்கும் காரணம்.

வன்முறையும் வெறுப்பின் செயல்பாடாகவே கருதப்படுகிறது. உணர்வுகளில் ஆரம்பிக்கும் இந்த வெறுப்பு சரீர அளவில் மற்றவரை தாக்கி கொலை செய்யும் அளவிற்கு ஆற்றல் வாய்ந்தது.

Testosterone என்னும் ஹார்மோன் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெறுப்பு உணர்வை தூண்டக் காரணமாக அமைகிறது. Serotonin என்னும் நரம்புத்தூண்டல் கடத்தி (Neurotransmitter) வெறுப்பை கட்டுக்குள் வைக்க உதவுகிறது.

எதிர்மறையான உணர்வுகள் அதாவது பயம், கோபம், வலி, விரக்தி அதிகரிக்கும்போது உங்களுக்குள் வெறுப்பு என்னும் உணர்வு தூண்டப்படுகிறது.

கொலைக்காரர்கள், தீவிரவாதிகள், மதவெறியர்கள் போன்றவர்கள் அப்படி ஈவு இரக்கமின்றி செயல்பட வெறுப்பே விதையாக அமைகிறது.

வெறுப்பு என்றால் என்ன? அது எப்படி உருவாகிறது? மூளையில் என்ன மாற்றங்களை ஏற்படுத்துகிறது? எப்படிப்பட்டவர்களை உருவாக்குகிறது? போன்ற பல காரியங்களைப் பார்த்தோம்.

இதை படிக்கும் போது ஒரு நபர் உங்கள் மனதிற்குள் வந்திருப்பார், அல்லது ஒரு சம்பவம் உங்கள் சிந்தையில் தோன்றும். அதை மறக்க நினைக்கிறேன், ஆனால் மறக்க முடியவில்லை என்று யோசிக்காதீர்கள்.

உங்களுடைய கஷ்டம், ஆதங்கம் எல்லாமே புரிகிறது. ஆனால், அந்த நபர் மீது உள்ள கோபம் போகவில்லை. மன்னிக்க வேண்டும் என்று தெரிந்தாலும், மன்னிக்க முடியாமல் கஷ்டப்படுகிறேன் என்று நீங்கள் குழம்புவது எனக்கு புரிகிறது. இப்படி யோசித்து பாருங்கள்! எவ்வளவு முறை தேவனை விட்டு விலகி, தூரம் போயிருப்போம். அதெல்லாம் மறந்து, நம்மை நேசித்து மன்னித்தாரே! மறுபடியும் மறுபடியும் ஏற்றுக்கொண்டாரே! அதை யோசிப்போமானால் இந்த நபரை மன்னிப்பது சுலபமாகிவிடும்.

வெறுப்பு என்னும் உணர்வில் இருந்து எப்படி வெளியே வருவது என்று பார்க்கலாம்.

- விரக்தி கோபமாக மாறி, கோபம் வெறுப்பாக மாறுகிறது. எனவே உங்களை கோபப்படுத்தக் கூடிய வாக்குவாதங்கள், காரியங்களுக்கு விலகி இருங்கள்.

- உங்கள் மீதுள்ள வெறுப்பு மற்றவர் மீது கோபமாக, வெறுப்பாக நீங்கள் வெளிப்படுத்திக் காண்பிக்கக் கூடும். எனவே முதலில் நீங்கள் இருக்கும் வண்ணம் உங்களை ஏற்றுக்கொள்ளுங்கள். எல்லாருக்குள்ளும் ஏதோ குறை இருக்கிறது என்பதை புரிந்து மற்றவர்களை மனதுருக்கத்தோடு ஏற்றுக்கொள்ளுங்கள்.

- உங்களுக்குள் இருக்கும் வெறுமை, விரிசல் வெறுப்பாக வெளிப்படலாம். அதனை சரிசெய்ய ஒரு நண்பரோடு தொடர்பு கொண்டு பேசுங்கள். பக்கத்து பெஞ்சில் உள்ளவரிடம் பேசிப்பாருங்கள். ஐக்கியத்தில் கலந்துகொள்ளுங்கள். புதிய பொழுதுபோக்கை கண்டுபிடித்து வெளியே சந்தோஷமாக செல்லுங்கள். இவையெல்லாம் உங்கள் விரிசலை ஒட்டவைக்க உதவும்.

- கடந்த கால கசப்பான நினைவுகளை விட்டு வெளியே வாருங்கள்...

எல்லாவற்றிற்கும் மேலாக மனதுருக்கத்தில் நிறைந்த அன்பான இயேசுவின் துணையை நாடுங்கள். உங்கள் விரக்தியை மாற்றி, மன்னிக்க உதவுவதோடு, கசப்பு, வெறுப்பு இல்லாமல் மகிழ்ச்சியாய் வாழ அவர் உதவுவார்! ●

......உணர்வுகள் தொடரும்.

வாலிபர் கொண்டாட்டம்

ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களில் மும்பை, ஆலங்குளம், சங்கரன்கோயில், திருப்பூர் மற்றும் பொள்ளாச்சியில் வாலிபர்கொண்டாட்டம் நடத்த தேவன் கிருபை செய்தார். இக்கூடுகைகளில் 2270 வாலிபர்கள் கலந்துகொண்டு பாவமன்னிப்பு அடைந்தவர்களாகவும், இயேசுவைவிட்டு பின்மாற்றத்திலிருந்த வாலிபர்கள் தங்கள் வாழ்வை புதுப்பித்தவர்களாகவும் கடந்து சென்றார்கள். இதில் சகோ. அப்பாத்துரை, சகோ. சாம் ஜெபராஜ் மற்றும் சகோ. அவினாஷ் அவர்கள் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்தளித்து வாலிபர்களுக்காக ஜெபித்தார்கள்.

MONTHLY YOUTH FELLOWSHIP

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல்கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் சினெர்ஜியா கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

சுஷ்மிதா மணி,
சிவகாசி.

நான் கடந்த மூன்று ஆண்டுகளாக சினெர்ஜியா கூடுகையில் பங்குபெற்று வருகிறேன். இக்கூடுகையின் மூலம் அநேக காரியங்களை தேவன் எனக்கு கற்றுக் கொடுத்தார். என்னுடைய தாலந்துகளை வெளிகொண்டுவர இக்கூடுகை மிகவும் உதவியாக இருந்தது. B.Sc. Maths படித்து முடித்து விட்டு அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று குழப்பத்தோடு ஜெபித்தேன். கர்த்தர் என் ஜெபத்தை நான் படித்த கல்லூரியிலேயே M.Sc. படிக்க உதவி செய்து வருகிறார். கடந்த ஆகஸ்ட் மாதம் என் அப்பாவிற்கு 2 முறை மாரடைப்பு வந்தது. நான்கு அடைப்புகள் இருப்பதாக மருத்துவர்கள் கூறினார்கள். உடனே Angioplast செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். 2 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும் சொன்னார்கள். கையிலிருந்து 4 ஆயிரம் ரூபாவை எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றார்கள். நான் அன்றைக்கு சினெர்ஜியா கூடுகையில் சொல்லி எல்லோரும் இணைந்து ஜெபித்தோம். அன்றைக்கே என் தந்தையின் நண்பர்கள் மூலமாக தேவன் எங்கள் தேவைகளை நிவர்த்தி செய்தார். எந்த சூழ்நிலையிலும் விசுவாசமுள்ள வாழ்க்கை வாழ சினெர்ஜியா கூடுகை கற்றுக் கொடுத்தது.தேவனுக்கே மகிமை!

1ST SUNDAY (7THE JULY)

VELLORE (3 PM):
Immanuvel Complex,
Viruthampet, Near Ambedkar Statue,
Vellore. 9442885315 | 9786379556

JEBAMALAI (2 PM)
Kadaiyam (via), Keelamathapuram,
(TirunelveliDist).
8300131000 | 9750955548

TIRUPUR (4PM - 6:30 PM)
Jesus Redeems Branch
Office, No:62 2nd Floor,
Benny Kumar Main Road,
Tirupur -01. 9750955549

BENGALURU (4PM - 6PM)
Steve's Gym, HBR. Layout 3rd Block,
(Near Jesus Calls). 9791444788

KULAMANICKAM (10:30AM - 12 PM)
Jesus the Way AG Church,
Adaikkalapuram,
Dt. 9750955548 | 9442855315

TIRUPATI (3PM) :
Old Community Hall,
West Church.
9985033401 | 9442885315

2ND SATURDAY (13TH JULY)

MADURAI (4:30 - 6:30PM)
Thomas Tution centre Hall
Opp. to Reliance Petrol Bulk,
Pasumalai.
7598155502 | 9750955548

OOTY (10AM - 1:00PM)
YWCA Chapel, Anandagiri.
9750955549

2ND SUNDAY (14TH JULY)

AMBUR (3PM - 6PM)
Concordia Hr.Sec.School, Opp Rly. Station, 9597927799 / 9442885315

SATHANKULAM (3.00 PM)
Carmel Stores 2nd Floor Opp Bus Stand, 9750955548 | 9442842315

THANJAVUR (3:00PM)
Jesus Redeems Gethsemane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road. 9444381971 | 9750955548

SIVAKASI (3PM - 5:30 PM)
Jesus Redeems Gethsemane Prayer House, HOREB Complex, 1st Floor, No 1292B PKN Road (Rathna Vilas Stop). 9750955548 | 9442906567 9442842315.

USILAMPATTI (3:00PM)
Arputha Jeba Maiyam, Opp TELC School 7598155502.

MARTHANDAM (4.30 PM),
H.M.S.Century Hall, Behind C.S.I. Church, (opp. P.P.K. Hospital) 9865189883

MUMBAI (5PM - 7:30PM)
Bright High School, Village Road, Bhandup(W), Mumbai - 400078 (Near Nahur Rly. station), 9004882470 | 8082410410

PAVOORCHATRAM (2:30 PM)
KTC Nagar CSI Christ Church 9750955548, 9994436722, 9842166406

POLLACHI (3:30 PM - 6 PM)
Balamurugan A/C Mahal, Coimbatore Road, Near Amuthasurabi Hotel. 9750955549 | 9486037586

KOVILPATTI (2:30PM - 5.30PM)
St. Paul's Matriculation School, Kovilpatti. 9750955548 9787322334

VILLUPURAM (3 - 6PM)
SAP Mahal 1st Floor, Opp. Petrol Bunk, Old Bus Stand 8344411022 | 9442885315

3RD SUNDAY (21ST JULY)

TIRUNELVELI (3:30 PM)
The Deaf & Dumb School, (opp- Central Jail) Palayamkottai. 9750955548 | 9488212915

CHENNAI (3.30PM)
VGP Victory House, Mount Rd. 9442 885315

COIMBATORE (4PM)
Jesus Redeems Branch Office Gethsamane Prayer Center, No:90, 1st, Floor Arts College Rd., Near Charan Tower, Coimbatore 0422 - 2309040 | 9750955549

TRICHY (3PM)
22A, Ist Floor, Thennur High Rd., Near KMC Bus Stop, Thennur, Trichy - 620017. 9750955549

NALUMAVADI (2.30PM)
Tabernacle of God, Nalumavadi, Thoothukudi Dt. 9750955548 9442842315 | 04639 - 220022

NAGERCOIL (4 PM)
Jehova Salvation Church, 369C, Derik Junction. 9865189883 | 7598155503

CUDDALORE (3PM - 6PM)
Jesus Redeems Branch Office, Chellakuppam (Old Town) 9965144000 | 9442885315

MUMBAI (5PM - 8PM)
Bethel, MithChowky Lane Near Girdhar Park, Marve Road, Malad -W. 9004882470 |9664050567

DINDIGUL (3PM - 5:30 PM)
Jesus Redeems Gethsemane Prayer Center, No.37H/69, Scheme Road, Nagal Nagar. 7598155502|9750955548

4TH SUNDAY (28TH JULY)

TUTICORIN (3PM - 5.30PM)
Suganthi Nursing Home Prayer Hall, Near Jesus Redeems Branch Office, 77 V.E Road, Opp to Holy Convent 9750955548 | 8344116000 9442842315

PONDICHERRY (3PM - 6PM)
Hallelujah A.G. Church, Thennan Salai Road, 8344433800 | 9787339422

THIRUVALLUR (2.30PM - 5 PM)
Jesus Redeems Branch Office HSR Tower (Near Gowdi Church) Theradi, Thiruvallur. 9442885315

MUMBAI (5PM - 7.30PM)
Dharavi 09004882470 | 8082410410

ERODE (4 PM - 6:30 PM)
Jesus Redeems Branch Office, No:216, Ist Floor Near Fire Service, Gandhiji Road, Erode - 1. 9750955549

SURANDAI (2.30PM)
Jawarhalal Middle School,Surandai. 9443962141 | 9750955548 9442842315

TIRUVANNAMALAI (4PM- 6PM)
Leebanon Bungalow, Vettavalam Rd.,Bypass Road Corner 9865553420 | 9789004627

THENI (2.30PM - 5 PM):
Jesus Redeems Branch Office, No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor, 7598155502 | 9976766422

PERNAMBUT (3 PM - 6 PM):
Revival Prayer Tower, V. Kotta Road, Pernambut, Vellore Dist. 99408 54125 | 9442885315

Comforter

இயேசுவிடுவிக்கிறார் வாலிபர்
உலகம் தொலைக்காட்சி நிகழ்ச்சி
மிக விரைவில் உங்கள் Comfort
தொலைக்காட்சியில்...
காணத்தவறாதீர்கள்!!

ஜெபத்தின் மேன்மை

ஜெபம் நம்முடைய வாழ்க்கையில் மகத்தான செயல்களை செய்யக்கூடியது. ஜெபம் செய்யக்கூடிய நபர் எதைக்குறித்தும் பயப்படவோ கலங்கியோ கவலையோடோ நிற்பதில்லை. காரணம் கர்த்தர் ஜெபிக்கிற மனிதரோடு எப்போதும் இருக்கிறார். ஜெபம் அநேகருக்கு கடினமானதாக இருக்கிறது. அல்லது ஜெபிக்கும்படியான நேரத்தை சரியாக அமைத்துக் கொள்ளாமல், தனக்கு ஜெபிக்கவே நேரம் இல்லை என்று சொல்லுகிறவர்களாக இருக்கிறார்கள்.

சிலருக்கு ஜெபம் என்றவுடனே தூக்கம் வந்துவிடும். ஜெபிக்க வேண்டும் என்ற ஆசையிருக்கும். ஆனால் ஜெபிக்கவோ அவர்களால் முடியாத அளவுக்கு சோர்வுகள் அதிகமாக அழுத்தும். சிலருக்கு குழுவாக அமர்ந்து ஜெபிக்கும்போது நன்றாக ஜெபிப்பார்கள். ஆனால் தனி ஜெபமென்பது இருக்காது. தனியாக அமர்ந்து எப்படி ஜெபிப்பது என்று அப்படிப்பட்டவர்களுக்கு தெரியாது. இந்த செய்தி ஜெபத்தின் மேன்மையையும் எப்படி ஜெபிப்பது என்பதைக் குறித்தும் தேவ ஆவியானவரின் ஒத்தாசையுடன் எழுதப்பட்டது. இதை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும்போதே ஜெப ஆவியை பெற்று உங்கள் குழு ஜெபத்திலும், தனி ஜெபத்திலும் வளர்ந்து ஆசீர்வாதமாக இருக்கப் போகிறீர்கள். அதுமட்டுமல்ல, அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்கப் போகிறீர்கள்...

சுலபமாக ஜெபிப்பது எப்படி?

நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம் (1யோவான் 5:14,15).

நாம் ஜெபத்தில் அமரும் முன்பாக நான் தேவனிடம் பேசப் போகிறேன், நான் பேசுவதை தேவன் கேட்கப்போகிறார் என்ற எண்ணத்தோடு நாம் ஜெபத்தில் அமர வேண்டும், நாம் ஜெபத்தில் பேசுவது மட்டுமல்ல நாம் பேசுவதை தேவன் கவனமாக கேட்டுக் கொண்டிருக்கிறார் என்பது தான் நம்மை அதிகநேரம் ஜெபம் பண்ண வைக் கும். நேரம் போவதே தெரியாத அளவுக்கு நம்மை ஜெபிக்க வைக்கும். நாம் தனிமையாக இருக்கிறோம் என்று நினைத்துவிட்டால் நமக்கு ஜெபம் அதிக நேரம் ஓடாது. தூக்கம் வந்துவிடும். எனக்கு எதிரே இயேசுவானவர் இருக்கிறார் என்ற எண்ணமே நம்மை உற்சாகமாக ஜெபிக்க வைக்கும்.

ஜெப வாழ்க்கையை புதுப்பித்துக்கொண்டே இருக்கும்

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுபெலன் அடைந்து கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள் (ஏசாயா 40:31).

ஜெபம் நம்முடைய வாழ்க்கையில் என்ன செய்கிறது என்றால், நம்மை ஒவ்வொருநாளும் மறுரூபப்படுத்துகிறது. கர்த்தருக்குள்ளாக இருந்து கர்த்தரை அறிந்துகொள்ளச் செய்கிறது. நம்முடைய வாழ்க்கையைக் குறித்த

தேவனுடைய சித்தத்தை தெரிந்துகொள்ளச் செய்கிறது. தேவன் எவ்விதமாக நமது வாழ்வில் செயல்படுகிறார் என்பதை விளங்கிக்கொள்ள செய்கிறது. கர்த்தர் நம்முடைய வாழ்வில் செயல்படுவதற்கு நம்மைக் காத்திருக்கச் செய்கிறது. இப்படியாக ஜெபம் நமது வாழ்வில் நம்மை புதுப்பித்துக்கொண்டே இருக்கிறது. நாம் வாழ்க்கை என்ற பயணத்தில் அதிகமாக சோர்ந்து போகிறோம் ஜெபம் நம்மை சோர்விலிருந்து உடனடியாக விடுவிக்கிறது. என்ன செய்வதென்று அறியாமல் நிற்கும்போது சரியான ஆலோசனையை பெற்றுக்கொள்ள கர்த்தரிடத்திற்கு உடனடியாக நம்மை நடத்துகிறது.

ஜெபம் சோதனைகளை ஜெயிக்க வைக்கும்

பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து அவர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி; நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார் (மத்தேயு 26:40,41).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில், தனக்காக ஜெபம்பண்ணும்படி சொல்லவில்லை. அவர்களுக்காக ஜெபிக்கும்படியாகத்தான்

சொல்லுகிறார். ஒருவேளை அவர்கள் இயேசு கிறிஸ்து சொன்னதுபோல ஒருமணி நேரம் ஜெபித்திருந்தால் இயேசு கிறிஸ்துவை ரோம போர் சேவகர்கள் பிடிக்கும்படியாக வந்தபொழுது பயந்து சிதறி ஓடியிருக்கமாட்டார்கள். எனவே ஜெபம் நம்மை சோதனை நேரங்களில் சோதனையை ஜெயிக்க வைக்கிறது. திடமனதுடன் நாம் செயல்படுவதற்கு ஜெபம் நமக்கு உறுதுணையாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் வருங்காரியங்களை அறிந்துகொள்வதற்கு உதவுகிறது.

ஜெபம் விசுவாசத்தை உறுதிப்படுத்தும்

கர்த்தர்: சீமோனே, சீமோனே இதோ கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன். நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார் (லூக்கா 22:31,32).

நாம் ஜெபத்தில் பேசுவது மட்டுமல்ல நாம் பேசுவதை தேவன் கவனமாக கேட்டுக் கொண்டிருக்கிறார் என்பதுதான் நம்மை அதிக நேரம் ஜெபம் பண்ண வைக்கும். நேரம் போவதே தெரியாத அளவுக்கு நம்மை ஜெபிக்க வைக்கும்

ஜெபம் செய்கிறவர்களின் ஆவிக்குரிய வாழ்வில் பின்வாங்குதல் வரவே வராது. ஏனென்றால் ஜெபம் விசுவாசத்தை உறுதிப்படுத்திக் கொண்டே இரக்கும். பயத்தையும் திகிலையும் விரட்டிக்கொண்டே இருக்கும்.

ஜெபம் செய்யாதவர்கள் எளிதாக பிசாசினால் ஏமாற்றப்பட்டு பின்வாங்க ஆரம்பித்து விடுவார்கள். தேவை இல்லாத எண்ணங்களையும் சிந்தனைகளையும் கொடுத்து, பிசாசு எப்போதும் பின்வாங்கிப் போகும்படியாக செயல்பட்டுக் கொண்டே இருப்பான். நாம் ஜெபத்தில் தரித்திருக்கும்பொழுது பிசாசின் தந்திரங்களை சரியாக அறிந்து அவனை மேற்கொள்ள ஜெபம் நமக்கு உதவி செய்கிறது. அதனால் தான் வேதம் சொல்கிறது; **எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்** (எபேசியர் 6:18).

பிரியமானவர்களே! ஜெபம் நமது வாழ்வில் பெரிய காரியங்களை செய்து நம்மை உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்லக்கூடியது. இப்படிப்பட்ட ஜெபத்தை செய்யாமல் விட்டுவிடக்கூடாது. எப்போதும் ஜெபிக்கிறவர்களாக இருப்போம். உன்னத ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோம்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக ●

ரெபேக்கா

போராட்ட ஜெபம் – யோசுவா

இஸ்ரவேல் மக்களுக்கும் ஆயியின் மனுஷருக்கும் சண்டை ஏற்பட்டது. இஸ்ரவேலர் ஆயியின் மனுஷருக்கு முன்பாக முறிந்தோடினார்கள் என்ற தகவல் கிடைத்தவுடன் யோசுவா திகைத்துப் போகவோ, எந்த மனிதனிடமும் உதவி கேட்கவோ ஓடவில்லை. தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு அவனும் இஸ்ரவேலின் மூப்பரும் சாயங்காலமட்டும் கர்த்தரின் பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்து ஜெபம் செய்தார்கள். அவர்களின் ஜெபம் கேட்கபட்டு அவர்களுக்கு பதிலும் கிடைத்தது. வெற்றியும் அடைந்தார்கள் (யோசுவா 7:1-12). அவனும் இஸ்ரவேல் மூப்பரும் சாயங்காலம் மட்டும் கர்த்தரின் பெட்டிக்கு முன்பாக கிடந்தார்கள் (யோசுவா 7:5).

ஆம் நண்பர்களே, இன்றும் ஜெபத்தை சந்தோஷத்தின் மிகுதியினாலும், சோர்வின் மிகுதியினாலும் ஜெபிக்கமாட்டார்கள். நவநாகரீக காலத்தில் ஜெபிக்க நேரமில்லாமல் வேலைகள் செய்யும்போதும், நடைபயிற்சி செய்யும்போதும் ஜெபிக்கிறார்கள். பலர் வசதிகள் பெருகும்போது ஜெபிக்க மறந்துவிடுகிறார்கள். எப்படி ஒரு கைபேசியை சார்ஜ் ஏற்றிக் கொள்கிறோமோ, அதேபோலத்தான் நாம் ஜெபித்து நமக்குப் பாதுகாப்பைத் தேடிக்கொள்ள வேண்டும்!

தனி ஜெபம் – இயேசு

இயேசு கிறிஸ்து ஜெபத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். இவர் தேவனுடைய குமாரனாக (மத்.14:5) இருந்த போதிலும் ஜெபம் செய்ய மலைமேல் ஏறினார். அங்கு இராமுழுவதும் ஜெபம் செய்தார். அதிகாலை இருட்டோடே ஜெபம் செய்ய மலைக்குப் போனார் என்று வேதம் சொல்கிறது. இவ்வுலக பாடுகள் அவரை வருத்தப்படுத்தியபோது அவர், "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கம் கொண்டிருக்கிறது நீங்கள் இங்கே தங்கி என்னோடே விழித்திருங்கள் என்று சொல்லி முகங்குப்புற விழுந்து" என் சித்தப்படி அல்ல, உம்முடைய சித்தத் தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார் (மத்.26:38,39). சீடர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு நீங்கள் ஒருமணிநேரமாவது என்னோடுகூட விழித்திருக்கக் கூடாதா? என்று கேட்டு, மறுபடியும் போய் ஜெபம் பண்ணினார். உலக மக்களின் பாவங்களை மீட்டு இரட்சிக்க அவர் பாடுபட்டார். பாடுபடுவதற்குரிய பெலனை இயேசு தமது தனி ஜெபத்தின் மூலமாகவே பெற்றுக்கொண்டார்.

வாலிபர்களே! ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையையும் அவர் ஜெயமாக மாற்றுவார் என்பதில் எந்த சந்தேகமும் இல் லை. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, இரவும் பகலும் தேவனை நோக்கி விண்ணப்பம் செய்தாரென்றால், நீங்களும் நானும் எத்தனை அதிகமாய் ஜெபிக்க வேண்டும்!

கண்ணீரின் ஜெபம் – எசேக்கியா ராஜா

யூதர்களின் ராஜாவாகிய எசேக்கியா தேவன் பேரில் விசுவாசமுள்ளவனாயிருந்தான். அவனைக் குறித்து "அவன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதைச் செய்தான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மரணத் தருவாயிலிருந்தபோது எசேக்கியா ராஜா தன் சுகத்துக்காக தேவனிடம் கெஞ்சி அழுதார். "ஆ, கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்ற விண்ணப்பம்பண்ணி எசேக்கியா மிகவும் அழுதான்" (ஏசாயா 38:3). அவனது கண்ணீரோடு கூடிய விண்ணப்பத்திற்கு உடனே பதில் கிடைத்தது. ஏசாயா தீர்க்கதரிசி மூலம் நீர் இனி பிழைக்க மாட்டீர், மரித்துபோவீர் என்று சொன்ன கர்த்தர், எசேக்கியா ராஜாவின் கண்ணீரின் ஜெபத்தைக் கேட்டு, அதே ஏசாயா மூலம் "உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன் (ஏசாயா 38:5) என்று கூறினார்.

ஆம் நண்பர்களே! சாதாரண ஜெபம் இயேசுவுக்கு தபால் அனுப்புவது போல்; கண்ணீரின் ஜெபம், இயேசுவுக்கு தந்தி அனுப்புவது போல்; இன்றைக்கும் அநேகர், எல்லாமே முடிந்தது; எனக்கு யாருமே இல்லை என்று வேதனையோடு வாழ்கின்றனர். நாம் கர்த்தருக்கு முன்பாக எசேக்கியாபோல் உண்மையும் உத்தமமுமாய் நடந்தால் எசேக்கியாவுக்கு கிடைத்த ஆசீர்வாதத்தை விட நாம் எண்ணிப்பார்க்க முடியாதளவு கர்த்தர் நம் கண்ணீருக்கும் பதில் கொடுக்கிறவராக இருக்கிறார்!

உபவாச ஜெபம் – எஸ்றா

தேவன் நமக்கு ஈவாக, கிருபையாய் தந்த அவரால் மீட்டுக்கொள்ளப்பட்ட ஆவி, ஆத்தும சரீரத்தை விழிப்பாயிருந்து காத்துக் கொள்ள வேண்டும். அர்த்தசஷ்டா ராஜாவின் காலத்தில் பாபிலோனிலிருந்து எருசலேமுக்கு வந்த எஸ்றா தன்னோடு வந்த வம்ச தலைவர்களோடு அகாவா நதியண்டையில் உபவாசத்தைக் கூறினான். தேவனுடைய ஆலயத்திற்காக அர்த்சஷ்டா ராஜா கொடுத்தனுப்பிய பொருட்களை உண்மையாய் ஒப்படைக்க வேண்டும் என்பதில் கவனமாய் இருந்தான். வழிப்பிரயாணத்தில் தேவனுடைய கரம் கூடவே இருக்க வேண்டும் என்று தேவனை நோக்கி உபவாசித்து மன்றாடினான். அவன் கூறிய காரணங்கள்: எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை தாழ்த்தவும், எங்களுக்காவும், எங்கள் பிள்ளைகளுக்ககாவும், எங்கள் சகல பொருட்களுக்ககாவும். செவ்வையான வழியை தேடுகிறதற்கும் இன்றைக்கும் மேற்கூறிய 5 காரணங்களும் நம்மை உபவாசிக்கத் தூண்ட வேண்டும். நாம் கர்த்தரிடம் நம்மை தாழ்த்தி, நம்முடைய பிள்ளைகளுக்காகவும், பொருள்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். நாம் வேதனை உண்டாக்கும் வழியை விட்டு திரும்பி, உபவாசித்து ஜெபித்தால் பரலோகத்தின் தேவன் எல்லாவற்றையும் ஆசீர்வதிப்பார். இப்படி எஸ்றாவின் விண்ணப்பத்தை தேவன் கேட்டார்.

ஆம் நண்பர்களே! நாமும் நம்மை தாழ்த்தி, நம்முடைய குடும்பத்திற்காகவும், பொருள்களுக்காகவும், பாதுகாப்பிற்காகவும் உபவாசித்து ஜெபித்தால் நிச்சயம் நம் வாழ்க்கை ஆசீர்வாதமாய் மாறும், தேவ பெலனும் கிடைக்கும்!

செய்தி

மோகன் சி. லாசரஸ்

உங்களிடத்தில் வருவேன் ஆயத்தப்படு

ஒருநாள் மாலை நேரம், ஒரு தகப்பன் தன் மகனை படகில் ஏற்றிக்கொண்டு, கடலில் உலா வந்து கொண்டிருந்தார். மகனும் கடல் அலைகளின் அழகை ரசித்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று ஒரு பெரும் காற்று வீசியது. அந்தக் காற்று படகை இழுத்துச் சென்றது. வெகுதூரம் சென்ற படகு, ஒரு பாறையில் மோதி உடைந்தது. உடைந்து போன அந்தப் படகின் ஒரு மரத்துண்டைப் பிடித்துக்கொண்டு, தகப்பனும், மகனும் கடலில் மிதந்து கொண்டிருந்தார்கள். அந்த வழியாக, "ஏதாவது படகு வருமா? கப்பல் வருமா?" என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அப்படியாக எதுவும் வருவதாகத் தெரியவில்லை. தகப்பன் சொன்னார், "மகனே எந்தப் படகும் வருவதாக தெரியவில்லை. நான் கரைக்கு நீந்திப்போய் உதவிக்கு ஆட்களை அழைத்து வருகிறேன். நீ இந்தக் கட்டையை மட்டும் விட்டு விடாதே! தைரியமாயிரு! நான் உன்னைக் காப்பாற்ற வருவேன்!" என்று சொல்லிவிட்டு, கரையை நோக்கி நீந்த ஆரம்பித்தார்.

கொஞ்ச தூரம் சென்றதும் திரும்பிப் பார்த்து, "மகனே, பயப்படாதே! நான் திரும்பி வருவேன்!" என்று கை அசைத்துக் காட்டி மகனை தைரியப்படுத்தினார். இன்னும் கொஞ்சத்தூரம் சென்றதும், மறுபடியும் திரும்பிப் பார்த்து கை அசைத்து, "மகனே, பயப்படாதே! நான் சீக்கிரமாய் திரும்பி வருவேன்" என்றார். அந்த தகப்பன் கரை சேர்ந்ததும், கடலோரக் காவல் படை அதிகாரிகளைச் சந்தித்து, விபரத்தைச் சொல்லி, தன் மகனைக் காப்பாற்றும்படியாகக் கேட்டுக் கொண்டான். அதற்குள் இரவு வந்துவிட்டது. அப்பொழுது அதிகாரிகள், "இருள் சூழ்ந்துவிட்டது. இப்போது போய் மகனை கண்டுபிடிக்க முடியாது, விடிந்ததும் கடலுக்குள் செல்லலாம்" என்று சொன்னார்கள். விடிந்ததும் காலையில் கடல் பாதுகாப்பு அதிகாரிகளுடைய படகில் ஏறி அந்தத் தகப்பன் மகனைத் தேடிப் புறப்பட்டார். மகன் இருந்த இடத்தைக் கண்டுபிடித்தார்கள். அவன் மகிழ்ச்சியோடு கை அசைத்தான். அவனை படகில் ஏற்றிய ஒரு அதிகாரி, "தம்பி, இரவு முழுவதும் எப்படி நீ இந்தக் கடலில் இருந்தாய்? உனக்கு பயமில்லையா?" என்று கேட்டார். எங்கும் இருட்டு, கடல் அலைகளின் இரைச்சல் சத்தம், சில பெரிய மீன்கள் என்னுடைய காலை உரசிக் கொண்டு சென்றன. பயப்படக்கூடிய சூழ்நிலைதான்! என்றாலும், என் தகப்பனார் என்னை விட்டுச் சென்றபோது, "நீ பயப்படாதே, நான் திரும்ப வருவேன்" என்று அவர் சொல்லிவிட்டுப் போன வார்த்தைகள் என் காதுகளில் தொனித்துக்கொண்டே இருந்தது. என் தகப்பனார் சொன்னபடியே திரும்ப வந்து, என்னை காப்பாற்றுவார் என்று எனக்குத் தெரியும். அதனால் எதைக் குறித்தும் பயமில்லாதபடி, என் தகப்பனாரின் வருகைக்காகக் காத்திருந்தேன்" என்றான்.

இன்று அலை அலையான பிரச்சனைகள் நம்மை மோதினாலும் போராட்டங்கள் இருளைப்போல நம்மை சூழ்ந்து வந்தாலும் நமக்கு பயமில்லை. காரணம், "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்" (யோவான் 14:18) என்று சொல்லி போன இயேசு கிறிஸ்து திரும்ப வருவார். நம்மை இந்தக் கடலிலிருந்து தூக்கி எடுப்பார்" என்கிற நம்பிக்கை நமக்கு உண்டு.

இந்த நம்பிக்கைதான் இன்றைக்கு நமக்கு ஆதாரம். நமக்காக இந்த உலகில் வந்து, நமக்காக சிலுவையில் மரித்து, நமக்காக உயிர்த்தெழுந்து, நமக்காக பரலோகத்தில் ஒரு வீட்டை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்து திரும்பவும் வந்து, நம்மை அந்தப் பரலோக வீட்டிற்கு அழைத்துச் செல்வார்.

“உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக;...நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்” (யோவான் 14:1,3) என்று இயேசு கிறிஸ்து வாக்குக் கொடுத்திருக்கிறார்.

அவர் திரும்ப வருவார்! நம்மை இந்தப் பொல்லாத உலகத்திலிருந்து மீட்டு, பரலோக இராஜ்ஜியத்தில் கொண்டு போய் சேர்ப்பார். ஆகவே கலங்காதீர்கள், பாடுகளைக் கண்டு சோர்ந்து போகாதீர்கள்! இன்னும் கொஞ்சக் காலம்தான்!

“இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது” (வெளி.22:12) என்று இயேசு கிறிஸ்து வாக்குக் கொடுத்திருக்கிறார்.

கர்த்தருக்காக வாழ்ந்து, பாடுகளை சகித்து, அவருக்காக ஊழியம் செய்து, அவரை மகிமைப்படுத்துகிற உங்களுக்கு பலன் கொடுக்க, அதாவது உங்களை கனப்படுத்த இயேசு கிறிஸ்து வருகிறார்!

எப்பொழுது அவர் வருவார்?

“அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்” (மத்தேயு 24:36) என்று இயேசு கிறிஸ்துவே சொல்லியிருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் வருகையின் நாளை பிதா தவிர வேறு ஒருவரும் அறிந்திருக்க முடியாது. ஆனால், வருகைக்குரிய அடையாளங்களைப் பற்றி கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

“யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; ...ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமிய திர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். ...அநேகங் கள்ளத்தீர்க்கதரிசகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்” (மத்தேயு 24:6-12).

இயேசு கிறிஸ்து சொன்ன இந்த சம்பவங்கள் எல்லாம், இன்றைக்கு நம்மைச் சுற்றிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! இது, ‘இயேசு கிறிஸ்துவின் வருகை மிக சமீபம்!” என்பதையே நமக்கு வெளிப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்துவின் வருகை மிக மிக சமீப மாகிவிட்டது. ஒருவேளை நாம் தான் கடைசித் தலைமுறையாகக் கூட இருக்கலாம்! ஆகவே, எந்த சமயத்திலும் நாம் இயேசு கிறிஸ்துவை சந்திக்க ஆயத்தமாயிக்க வேண்டும்.

வருகையில் நாம் இயேசு கிறிஸ்துவை சந்திக்க அவர் சொன்ன இரண்டு காரியங்களை நீங்கள் செய்தால் போதும்.

எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்!

“இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் (கடைசிகால ஆபத்துகளுக்கெல்லாம்) தப்பி, மனுஷகுமாரனாகிய இயேசுவுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்” என்று சொல்கிறார் (லூக்கா 21:36). இயேசு கிறிஸ்துவின் வருகையில் அவருக்கு முன்பாக பாத்திரவான்களாக நிற்க வேண்டுமானால், “எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும்!” என்று இயேசு கிறிஸ்துவே சொல்லியிருக்கிறார், பாருங்கள்!

“...விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்” (மத்தேயு 26:41) என்று சொன்ன இயேசு கிறிஸ்து “ஜெபம் பண்ணி விழித்திருங்கள்” என்று சொல்லியிருக்கிறார். எப்பொழுதும் ஜெபிக்கிறவர்கள்தான் வருகையில் இயேசு கிறிஸ்துவை மகிழ்ச்சியோடு சந்திக்க முடியும். ஆகவே,

எப்பொழுதும் ஜெபிப்பதற்கு உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். எப்பொழுதுமே ஜெபித்துக் கொண்டே இருக்க முடியுமா? அப்படி ஜெபிப்பதற்கு என்னதான் இருக்கிறது? என்கிற ஒரு கேள்வி உள்ளத்தில் எழும்பலாம்! நாம் ஜெபிக்க வேண்டிய காரியங்களை கர்த்தர் தம்முடைய வேத வசனத்தின் மூலமாக நமக்கு சொல்லியிருக்கிறார் (1 தீமோ.2:1,2).

அதிகாரத்தில் உள்ள யாவருக்காகவும் ஜெபிக்க வேண்டும். பிரதமர் முதல்வர், மந்திரிமார்கள், எம்பிக்கள், எம்எல்ஏக்கள், கலெக்டர், தாசில்தார், காவல்துறை அதிகாரிகள், நீதித்துறை அதிகாரிகள்... என்று அதிகாரத்தில் இருக்கிற யாவருக்காகவும் ஜெபிக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவே ஜெபிக்கச் சொல்லி இருக்கிறபடியினால், நாம் ஜெபித்தால், இவர்களுக்குள் நிச்சயமாகவே மாற்றம் வரும்! ஆகவே, விசுவாசத்தோடு எல்லோரும் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். அதிகாலையில் எழுந்து, ஒரு குறிப்பிட்ட நேரம் தேவ சமூகத்தில் முழங்கால்படியிட்டு ஜெபியுங்கள்.

சுவிசேஷத்தை அறிவியுங்கள்!

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து, பரலோகத்திற்கு ஏறிச் செல்வதற்கு முன்பாக தன்னைப் பின்பற்றிய சீஷர்களுக்குக் கொடுத்த வேலை,

“புறப்பட்டுப்போய் சுவிசேஷத்தை அறிவியுங்கள்” என்பதுதான். இது, தேவ ஊழியர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்ட கட்டளை அல்ல. இயேசு கிறிஸ்துவின் கிருபையினால் இரட்சிக்கப்பட்டு, அவரைப் பின்பற்றுகிற யாவருக்கும் கொடுக்கப்பட்ட கட்டளை. அதாவது, “இது இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளை” என்றும் சொல்லப்படுகிறது. அவர் பரலோகத்திற்குச் செல்லும்போது, அவரைப் பின்பற்றுகிற நமக்கு அவர் சொல்லிவிட்டுப்போன முக்கியமான கடைசி கட்டளை இது. அப்படியானால், அவர் திரும்பவும் வரும்போது, “நான் சொல்லிவிட்டுப் போன வேலையை செய்து முடித்தீர்களா?” என்றுதான் கேட்பார். சுவிசேஷத்தை அறிவிப்பதுதான் அவருடைய வருகைக்கு சரியான ஆயத்தம்.

இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது சுவிசேஷத்தை அறிவித்துக் கொண்டிருக்கிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் கட்டாயம் வருகையில் இயேசு கிறிஸ்துவோடுகூட இருப்பார்கள்.

ஆத்துமாக்களுக்காக ஜெபிப்பதும், சுவிசேஷத்தை அறிவிப்பதும்தான் இயேசு கிறிஸ்துவின் வருகையில் அவரை சந்திக்க சரியான ஆயத்தம். ஏதாவது ஒரு விதத்தில் சுவிசேஷத்தை அறிவியுங்கள். தினமும் சிலருக்கு கைப்பிரதிகளைக் கொடுக்கலாம். ஒரு குழுவை ஏற்படுத்தி, கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷத்தை அறிவிக்கலாம். மருத்துவமனை ஊழியம் செய்யலாம், தெரு பிரசங்கம் செய்யலாம்!

உங்களால் நேரடியாக அறிவிக்க முடியாவிட்டால் உங்கள் சார்பாக வேறொருவர் சுவிசேஷத்தை அறிவிக்க உதவி செய்யலாம். மிஷனெரிகளைத் தாங்கலாம்! சுவிசேஷப் புத்தகங்கள் வாங்கிக் கொடுக்க உதவி செய்யலாம் ஏதாவது ஒரு விதத்தில் சுவிசேஷத்தை பரவச் செய்யுங்கள்.

இதுதான், நாம் எல்லோரும் செய்ய வேண்டிய முதன்மையான வேலை. இயேசு கிறிஸ்துவை சந்திக்க ஆயத்தப்படுங்கள்! இதோ, அவர் சீக்கிரமாய் வருகிறார்! ●

ரேச்சல்

சோதோம் கொமோரா

மக்களின் பாவங்களுக்காக தேவனால் அழிக்கப்பட்ட நகரங்களாகும். எபிரெய மொழியில் சோதோம் என்பது "எரிக்கப்பட்ட" எனவும் கொமோரா என்பது "அழிக்கப்பட்ட மேடு" எனவும் பொருள்படும். நகரில் வாழ்ந்த மக்களின் அதீத பாவங்கள் காரணமாக சோதோம் கொமோரா, அதமா, செபோயிம் நகரங்கள் மீது ஆண்டவர் வானத்திலிருந்து கந்தகமும், நெருப்பும் பொழியச் செய்தார். அதுமுதல் இந்நகரர்களின் பெயர் பாவத்துக்கும் அதன்மூலம் கடவுளால் வரும் அழிவுக்கும் உதாரணமாக பயன்படுத்தப்படுகிறது.

அமைவு

சோதோம் நகரமானது ஐந்து நகரங்களின் தலைமை நகர மாகும். இவற்றின் அமைவிடம் பற்றிய ஐயம் நிலவுகிறது. பிரபல வரலாற்றாசிரியரான "ஜொசபசின்" கருத்துப்படி, இது சவக்கடலின் தெற்கில் அமைந்துள்ளது. "கொண்டர்" என்ற வரலாற்றா சிரியரின் கருத்துப்படி சவக்கடலுக்கு வடக்கே 7 மைல் தூரத்தில் உள்ள டெல எஷ்-சகுர் என்ற இடமாகும்.

வேறு சிலரின் கருத்து, இது சாக்கடலுக்கு தெற்கே 3 மைல் தூரத்தில் உள்ள எஸ்-சபிக் என்ற இடமாகும். ஆதியாகமம் 13:10ல் இவை யோர்தான் நதிக்கரையில் இருந்ததாக கூறப்பட்டுள்ளது. மேலும் ஆபிரகாமின் மைத்துனரான லோத்து என்பவர் சோதோம் நகருக்கு அருகாமையில் காணப்பட்ட செழிப்பான புல்வெளிகள் காரண மாக அங்கே வசித்து வந்தார்.

வேதத்தில் சோதோம் கொமோராவை சான்றாக வைத்து கூறப்பட்ட எச்சரிப்பின் வார்த்தைகள்...

எருசலேமின் தீர்க்கதரிசகளும் சோதோம் கொமோரா பட்டணத்தைப்போல் இருக்கிறார்கள் (எரேமியா 23:14)

மோவாப் மற்றும் அம்மோன் புத்திரர் செய்த நிந்தையினிமித்தம் சோதோம் கொமோராவைப் போல் ஆகும் (செப்பனியா 2:9).

தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளாத பட்டணத்திற்கு நேரிடுவது; நியாயத்தீர்ப்பு நாளிலே அந்த பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும், சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் (மத்.10:15; மாற்.6:11; லூக்.10:12).

கப்பர்நகூம் பட்டணத்திற்கு, நியாயத்தீர்ப்பு நாளிலே சோதோம் கொமோராவை விட பயங்கரம் உண்டாகும் (மத்.11:23,24).

லோத்தின் நாட்களில் நடந்தது போலவே, மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் நடக்கம் (லூக்.17:28-30).

அவபக்தியாய் நடப்பவர்களுக்கு சோதோம் கொமோரா பட்டணத்தை நமக்கு திருஷ்டாந்தரமாக வைத்தார் (2 பேதுரு 2:6; யூதா 7).

சான்று: லோத்தின் மனைவி உப்புத்தூண் ஆனது சான்றாக நிற்கிறது! ●

ஜெபம்

எஸ்தர்

ஜெபக் கையேடு

ஜீலை 2019

1 கொலை, கொள்ளை வழிப்பறி சம்பவங்களில் 18 வயதுக்குட்பட்ட இளம் மாணவர்கள் குற்றவாளிகளாக இருப்பதாக ஆய்வுகள் கூறுகிறது. இளம் வாலிபர்களின் இந்த எண்ணங்கள் மடங்கடிக்கப்பட ஜெபிப்போம்.

2 சிறுவயதில் தடம் மாறி செல்லும் மாணவர்களை நல்வழிபடுத்த ஆசிரியர்களும் பெற்றோர்களும் முன்வந்து ஆலோசனை கொடுக்க ஜெபிப்போம்.

3 இளம் மாணவர்கள் சிறுவயதிலேயே சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு தங்கள் எதிர்கால வாழ்க்கையை கேள்வி குறியாக்கும் மாணவர்களின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

4 டி.வி. சினிமா, இசை, இன்டர்நெட் போன்ற சமூக வலைதளங்களில் தங்கள் நேரத்தை வீணாக்கி படிப்பை தொடர முடியாமல் தவிக்கும் இளம் மாணவர்களுக்காக ஜெபிப்போம்.

5 இளம் வாலிபர்கள் 20%த்தினர் மதுபானம் தவிர மற்ற போதை பொருட்களுக்கு அடிமையாகி இருக்கும் மாணவர்கள் இந்த அடிமைத்தனத்தி லிருந்து வெளிவர ஜெபிப்போம்.

6 இளைஞர்கள் தினமும் சராசரியாக 4 மணி நேரம் 48 நிமிடங்களை கம்பியூட்டர் அல்லது தொலைபேசியில் செலவிடுவதாக ஆய்வு கூறுகிறது. இளைஞர்களை கட்டி வைத்திருக்கும் கண்ணிகளிலிருந்து வெளிவர ஜெபிப்போம்.

7 5 முதல் 17 வயதுகுட்பட்ட இளைஞர்களில் 90% கம்பியூட்டர் பயன்படுத்துகிறார்கள். 59% இன்டர்நெட் பயன்படுத்துவதாக ஓர் ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகிறார். மாணவர்களை இதிலிருந்து விடுபட ஜெபிப்போம்.

8 மணகணக்கில் செல்போன் பேச்சில் மூழ்கி கிடக்கும் இளைஞர் மற்றும் இளம் பெண்களின் மனதில் ஒரு மாற்றம் உண்டாகி படிப்பில் கவனம் செலுத்த ஜெபிப்போம்.

9 செல்போன் பயன்பட்டால் தவறாக படம் பிடித்தல், ஆபாச படங்கள் பார்த்தல் போன்றவற்றால் தங்கள் கல்வியில் கவனம் செலுத்த முடியாமல் இளைஞர் சமுதாயம் சீரழியும் இந்த நிலைமை இளைஞர்களை விட்டு வெளியேற ஜெபிப்போம்

10 போதை பழக்கத்தால் கொலை மற்றும் கொள்ளைகள் அதிகரித்து வருகின்றது. தமிழகத்தில் இருக்கும் டாஸ்மாக் கடைகள் மூடப்பட ஜெபிப்போம்.

11 போதைக்கு அடிமைப்பட்டு சில குடும்பங்கள் பிரிவினை மற்றும் வறுமை கோட்டிற்கு ஆளாகி நடுத்தெருவில் நிற்கும் அவலம் ஏற்பட்டுள்ளது. போதைக்கு அடிமையாகியுள்ள மனிதர்கள் மனம் திரும்ப ஜெபிப்போம்.

12 பள்ளிக் கல்லூரி படிக்கும் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போதை பழக்கத்துக்கு அடிமை யாகி தங்கள் வாழ்க்கையை இழந்து வருகின்றனர். இவர்கள் இந்த தீய பழக்கங்களிலிருந்து வெளிவர ஜெபிப்போம்.

13 இந்தியாவில் 13% இந்திய இளைஞர்கள் வேலையில்லை என்ற தகவல் அதிகரித்து வருகிறது. வேலை வாய்ப்பை இந்திய அரசாங்கம் உருவாக்கிக் கொடுக்க ஜெபிப்போம்.

14 ஒவ்வொரு ஆண்டும் 10 லட்சம் பொறியாளர்கள் படித்து பட்டம் வாங்கி வேலைக்காக காத்திருக்கின்றனர். அதில் 7 முதல் 12%த்தினர் மட்டுமே வேலை பெறுகின்றனர். இளைஞர்களுக்கு வேலை கிடைக்கவும் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.

15 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை இந்தியாவில் 7 லட்சத்து 13 ஆயிரத்து 511 விவாகரத்து வழக்குகள் நிலுவையில் இருப்பதாக புள்ளிவிவரம் கூறுகிறது, விவாகரத்து வழக்குகள் கொடுக்கப்பட்டுள்ள தம்பதிகள் இணைந்து வாழ ஜெபிப்போம்,

16 தமிழகத்தில் 21 ஆயிரத்து 672 விவாகரத்து வழக்குகள் நிலுவையில் உள்ளது. ஆண்டுக்கு 1200 வழக்குகள் புதிதாக பதிவாகி வருவதாக புள்ளி விவரம் கூறுகிறது. இந்த தம்பதிகளுக்குள் இருக்கும் மனகுழப்பங்கள் மாற ஜெபிப்போம்.

17 கேரளாவில் ஒரு மணி நேரத்தில் 5 விவாகரத்து வழக்குகள் பதியப்படுகின்றன. ஒரு நாளைக்கு 130 வழக்குகள் விவாகரத்து வழங்கப்பட்டு முடித்து வைக்கப்படுகின்றனர். குடும்பங்களை பிரிக்க நினைக்கும் ஆவிகளை கட்டி ஜெபிப்போம்.

18 விவாகரத்து கேட்டு வரும் தம்பதிகளுக்கு நல்ல குடும்ப ஆலோசனை மையங்கள் அமைக்கப் பட்டு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் குடும்பங்கள் பிரியாமல் சேர்த்து வைக்க ஆலோசனை வழங்கப்பட்ட ஜெபிப்போம்.

19 நிலுவையில் வைக்கப்பட்டுள்ள வழக்குகளை சீக்கிரத்தில் விசாரித்து தீர்வுகள் எடுக்கப்பட நீதிபதிகள் அரசாங்கம் முன்வர ஜெபிப்போம்.

20 வரதட்சணை கொடுமை, மாமியார் கொடுமை, தவறான உறவுகளினால் அதிக குடும்பங்கள் பிரிந்து வாழ்கிறது. இந்த ஆவியை கட்டி ஜெபிப்போம்.

21 கணவன் மனைவிக்குள் ஒருமனம் அன்பும் உண்டாகவும், விட்டு கொடுத்து வாழக்கூடிய மனப்பக்குவத்தையும் இளம் தம்பதியினருக்கு கொடுக்கப்பட ஜெபிப்போம்.

22 நீட் தேர்வில் தோல்வியடைந்த பிள்ளைகள் தற்கொலை தீர்வாகாது என்று உணர ஜெபிப்போம்.

23 பிள்ளைகளை இழந்த குடும்பங்களின் ஆறுதலுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.

24 நீட் தேர்விற்கு தயாராகும் ஒவ்வொருவருக்கும் சரியான விழிப்புணர்வு ஆலோசனைகள் வழங்கப்பட ஜெபிப்போம்.

25 நீட் தேர்வில் தோல்வியடைந்த 7 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பெற்றோர்களால் சரியாக வழிநடத்தப்பட ஜெபிப்போம்.

26 இனி எந்த ஒரு பிள்ளைகளும் தற்கொலை செய்து கொள்ளாமல், தற்கொலை எண்ணங்கள் வராமல் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

27 நீட் தேர்வில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு தகுந்த கல்லூரியில் படிக்க வாய்ப்புகள் கிடைத்து நல்ல முறையில் படிக்க ஜெபிப்போம்.

28 இந்த முறை தோல்வியடைந்த மாணவ மாணவியர் முயற்சியை கைவிடாமல் தொடர்ந்து முயற்சி செய்து தங்களுடைய கனவுகள் நிறைவேற ஜெபிப்போம்.

29 புதிதாக பதவியேற்றிருக்கும் அரசாங்கத்திற்காக அமைச்சர்களுக்காக MPக்களுக்காக ஜெபிப்போம்.

30 இந்திய பிரதம மந்திரிக்காக, அவருடைய பாதுகாப்பிற்காக, நல்ல திட்டங்களை கொண்டு வரவும் ஜெபிப்போம்.

31 எல்லா மாநில முதலமைச்சர்களுக்காக MLAக்களுக்காகவும், அவர்களுடைய பொறுப்பை உணர்ந்து அந்தந்த மாநிலங்களில் மக்களுக்கு நல்ல புதிய திட்டங்கள் கொண்டு வர ஜெபிப்போம்.

உங்கள் ஜெபக்குழுவில் நீங்கள் ஜெபித்து பதில் கிடைத்த சாட்சிகள் இருந்தால் எங்களுக்கு எழுதுங்கள். தினமும் ஒரு நிமிடம் தேசத்திற்காய் திறப்பிலே நிற்போம்... தினமும் ஒரு நிமிடம் எடுத்து அன்றைய தேதியில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபக்குறிப்புக்காக முழுமனதோடு ஜெபியுங்கள்.

லீனா அவினாஷ்

பிரியமானவர்களே,கிறிஸ்தவ வாழ்க்கையில் நமக்கு இரண்டு தெரிந்தெடுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்று நாம் தரிசித்து (பார்த்து) நடக்கிறோம், இரண்டாவது நாம் விசுவாசித்து நடக்கிறோம்.

தரிசித்து நடப்பது என்றால், நம் எதிர்காலத்தைப் பற்றி எல்லா தகவல்களும் நமக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கும். உங்க வாழ்க்கைக்கு தேவனுடைய திட்டம் என்ன?அடுத்து என்ன நடக்கப்போகிறது? போன்ற எல்லா தகவல்களும் தெரிந்தபின் நான் பாதுகாப்பாக தான் இருக்கிறேன் என்ற நம்பிக்கை கிடைத்தவுடன் தேவனுக்கு கீழ்படிவதையே, தரிசித்து நடப்பது என்கிறோம்.

ஆனால் விசுவாசித்து நடப்பது என்றால், கடினமான சூழ்நிலையில் அடுத்து என்னவென்று தெரியாதபோது, சூழ்நிலைகள் மாறுபடும் போது தேவன் நம் வாழ்க்கைக்கு என்ன திட்டம் வைத்திருக்கிறார் என்பது தெரியாத போதும், அவர் மீது முழுமையாக அவரை சார்ந்து முன்னேறி செல்வதாகும்,

ஆபிரகாம் (ஆபிராம் என்று அழைக்கப்பட்டவர்) விசுவாசித்து நடந்தவர். அவருடைய வாழ்க்கையை வேதத்தில் பார்க்கிறோம், தேவனுடைய ஆச்சரிய மான வாக்குத்தத்தங்களை நிறைவேற்றவும் யூதர்களின் தகப்பனாகவும் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர். இது தேவனுடைய தவறான தெரிந்தெடுப்பாக அநேகரால் கருதப்படலாம். ஏனென்றால் அவர் விக்கிரகங்களை வணங்கும் சந்ததியை சார்ந்தவர் அவரும் விக்கிரகங்களை வணங்கியிருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் உள்ளவரை தான் தேவன் தெரிந்தெடுந்தார். எனவே, நம் ஞானத்திற்கு அப்பாற்பட்டு தேவன் எப்பொழுதும் செயல்படுவார். அவருடைய தெரிந்தெடுப்புகள் சிறப்பானது என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

விசுவாசித்து நடக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

தேவன் ஆபிரகாமின் வாழ்வில் செய்ததை போலவே நம் வாழ்விலும் சில காரியங்களை செய்ய விரும்புகிறார் (ஆதி.12:1-8). அவர் தேவனுக்கு எப்படி கீழ்ப்படிந்தார் அல்லது எப்படி செயல்பட்டார் என்பதை பார்க்கிறோம். இதனை தெரிந்து கொள்வதின் மூலமாக நாமும் தரிசித்து நடவாமல் எப்படி விசுவாசித்து நடப்பது என்பதை கற்றுக்கொள்ள முடியும்.

தேவனுக்கு செவிகொடுங்கள்

கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு புறப்பட்டு, நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னை பெரிய ஜாதி யாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப்

பெருமைப்படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன், பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார் (வசனம் 1-3).

நூற்றுக்கணக்கான ஆண்டுகள் யாரிடமும் பேசாமல் அமைதியாக இருந்த தேவன் ஆபிரகாமை சந்தித்து, வாக்குத்தத்தங்களை மட்டுமல்ல அதோடு கடைபிடிக்க வேண்டியவைகளையும் கூறினார். சில காரியங்கள் ஆபிரகாமிற்கே அப்போது நம்ப முடியாதவைகளாக இருந்திருக்கும். உலகத்தையே மாற்ற தேவன் அவரை பயன்படுத்த போகிறார் என்பதுபோல இருந்திருக்கும். எனினும் சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்டு தேவனுக்கு கீழ்ப்படிந்தார் ஆபிரகாம்.

நாமும் விசுவாசித்து நடக்கிறோம் என்றால் தேவனுக்கு செவிக்கொடுக்க வேண்டும். கிறிஸ்தவர்களாக, தேவனை பின்தொடர்வதே நம்முடைய இலக்கு. அப்படி அவரை பின்தொடர வேண்டுமானால் அவர் நம்மில் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை நாம் தெரிந்திருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் நம் திட்டங்களை செயல்படுத்த திட்டமிடும் முன் அந்த நாளில் தேவன் நம் மூலம் என்ன செய்ய விரும்புகிறார் என்பதை தெரிந்துகொள்ள அவருடைய வார்த்தையை வாசித்து ஜெபிக்க வேண்டும்.

இப்படி நான் சொல்வதால், நாம் திட்டமிடக்கூடாது என்பது அல்ல, நம்முடைய திட்டங்களை ஒவ்வொரு நாளும் அவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அப்படி ஒருவேளை செய்ய தவறுவோமானால், அன்று தவறான தீர்மானங்கள் எடுத்துவிடுவோம். அதின் விளைவு மோசமானதாக இருக்கலாம். அதிக வலியையும் வேதனையையும் உண்டாக்கலாம். தேவன் நம்மில் இருக்கும் பரிசுத்த ஆவியானவரின் மூலம் பேசுகிறார். சில நேரங்களில் அவருடைய வார்த்தையின் மூலம் பேசி நம்மை வழிநடத்துவார்.

> ஆபிரகாம் தேவனை நம்பினார். அதாவது உன் வீட்டை இனத்தை விட்டு வெளியேறு என்பது கஷ்டமாக இருந்தாலும், எங்கு செல்ல போகிறோம் என்பது அவருக்கு தெரியாமல் இருந்த போதிலும், வாக்குத்தத்தங்கள் நிறைவேறுமா என்ற உறுதி இல்லாத போதி லும், ஆபிரகாம் தேவனை நம்பினார்

தேவனை நம்புங்கள்

ஆபிரகாம் தேவனை நம்பினார். அதாவது உன் வீட்டை இனத்தை விட்டு வெளியேறு என்பது கஷ்டமாக இருந்தாலும், எங்கு செல்ல போகிறோம் என்பது அவருக்கு தெரியாமல் இருந்த போதிலும், வாக்குத்தத்தங்கள் நிறைவேறுமா என்ற உறுதி இல்லாத போதிலும், ஆபிரகாம் தேவனை நம்பினார்.

ஆபிரகாம் தேவனின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்தார். இதுவே அவருடைய விசுவாசத்தை நமக்கு காண்பிக்கிறது. ஆரானைவிட்டு அவர் வெளியேறும்போது அவருக்கு வயது 75 (வசனம் 4). அந்த வயதிலும் அவர் அந்த பிரயாணத்தை மேற்கொண்டார். அதுமட்டுமல்ல அது ஒரு நீண்ட மற்றும் ஆபத்தான பிரயாணமாய் இருந்தது. ஆனால் ஆபிரகாம் தேவன் சொன்னால் அதை செய்துமுடிப்பார் என்று நம்பினதோடு ம ாத்திரமல்ல, தேவனின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து தன் பிரயாணத்தை துவங்கினார்.

ஆபிரகாமைப்போல, தேவன் நம்மை எங்கே வழிநடத்துகிறார் என்பது நமக்கு தெரியாது. ஒருவேளை நாம் அவரை சந்தேகப்பட்டோ மானால், நாம் ரொம்ப யோசித்து விவாதித்து கடைசியில், இது வேலைக்கு ஆகாது என்ற முடிவிற்கு வந்துவிடுவோம். வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால், அவர் சொன்னதை செய்யமாட்டார் என்று அவர் மீது சந்தேகப்படுவதாகும்.

எல்லாமே சரியாக செல்லும்போது, எந்தவித ரிஸ்க் எடுக்க வேண்டிய சூழ்நிலை வராதபோது தேவனை பின்தொடர்வது சுலபம். ஆனால், எதிர்பாராத திசையில் தேவன் வழிநடத்தும்போது, அடுத்து என்ன நடக்கப்போகிறது என்ற நிச்சயம் இல்லாதபோது, நம் சந்தேகங்கள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் நம்மை தடுக்கலாம்.

ஆனால் நாம் விசுவாசித்து நடவாமல், தரிசித்து நடக்கும்போது, தேவன் நம் வாழ்க்கைக்காக வைத்திக்கும் எல்லா திட்டங்களையும் நாம் இழந்துவிடுவோம். நாம் தேவன் மீது நம்பிக்கை வைத்து எவ்வளவு துரிதமாய் அவருக்கு கீழ்ப்படிந்து அவரை பின்தொடர்கிறோமோ அதனை வைத்தே நம் ஆவிக்குரிய வளர்ச்சியை அளவிடலாம்.

தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள்

கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான்; லோத்தும் அவனோடேகூடப் போனான். ஆபிராம் ஆரானைவிட்டுப் புறப்பட்டபோது, எழுபத்தைந்து வயதுள்ளவனாயிருந்தான். ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராயையும், தன் சகோதரனுடைய குமாரனாகிய லோத்தையும் தாங்கள் சம்பாதித்திருந்த தங்கள் சம்பத்தெல்லாவற்றையும், ஆரானிலே சவதரித்த ஜனங்களையும் கூட்டிக்கொண்டு, அவர்கள் கானான் தேசத்துக்குப் புறப்பட்டுப்போய், கானான் தேசத்திலே சேர்ந்தார்கள் (வசனம் 4,5).

தேவனுக்கு செவிகொடுத்து அவர் மீது நம்பிக்கை வைத்து, தன்னுடைய கீழ்ப்படிதலை வெளிப்படுத்தும் விதத்தில், தேவன் காண்பித்த அந்த ஊருக்கு செல்லும்படி முதல் அடி எடுத்து வைத்தார் ஆபிரகாம்.

வேதத்தில் கீழ்ப்படிதல் என்பது மிகவும் முக்கியமானது. ஏனென்றால் தேவன் சொல்வதை செய்ய அது மிக அவசியமானது. நாம் நம் வாழ்வில் அனுபவித்துக் கொண்டிருக்கும் காரியங்கள் எல்லாமே ஒன்று கீழ்ப்படிந்ததின் விளைவாக இருக்கும், இல்லையென்றால் கீழ்ப்படியாததின் விளைவாக இருக்கும்.

நாம் தேவன் மீது நம்பிக்கை வைத்து அவரை உண்மை யாய் பின்பற்றுவோமானால், அவர் நம் வாழ்க்கைக்காக வைத்திருக்கும் திட்டத்தை நம்மால் புரிந்துகொண்டு அதற்கு கீழ்ப்படிந்து நம்மால் வாழமுடியும்.

தேவனை ஆராதியுங்கள்

கர்த்தர் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுப்பேன் என்றார். அப்பொழுது அவன் தனக்குத் தரிசனமான கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினான் (வசனம் 7).

கானான் தேசத்திற்கு வந்தவுடன், ஆபிரகாம் தேவனுக்கு பலிபீடத்தை கட்டி அவரை ஆராதித்தார். அந்த பிரயாணம் முழுதும் பத்திரமாக தன்னை வழிநடத்தி, தன்னுடைய சந்ததிகளுக்கு கொடுப்பேன் என்று சொன்ன வாக்கை எண்ணி தேவனுக்கு பலிபீடம் கட்டி அவரை தொழுதுக் கொண்டார்.

இதுவரை தேவன் உண்மையுள்ளவராய் அவரை வழிநடத்தி வந்திருப்பாரானால், இனிமேலும் வழிநடத்துவார். கொடுத்த வாக்குகளையும் நிறைவேற்றுவார்.

தேவன் நம் வாழ்விலும் எவ்வளவு உண்மையுள்ளவர் என்பதை தெரிந்துகொள்ளும்போது நாமும் அதனை எண்ணி அவரை துதிக்க வேண்டும். இருதயத்தின் ஆழத்தில் இருந்து நன்றி சொல்வதே உண்மையான ஆராதனை. ஒவ்வொரு முறையும் அவருக்கு கீழ்ப்படிந் ததின் விளைவால் அவர் நமக்கு நன்மைகளை செய்வதை பார்க்கும்போது, அவரை துதிக்க அவருக்கு நன்றி சொல்ல நமக்கு பல காரணங்கள் இருக்கும் அல்லவா?

இதை வாசிக்கும் பிரியமானவர்களே! உங்கள் வாழ்க்கையில் எப்படி அதிகம் தரிசித்து நடக்கிறீர்களா? அல்லது விசுவாசித்து நடக்கிறீர்களா? கொஞ்சம் யோசித்து பாருங்கள். விசுவாசித்து நடப்பது என்பது அவருக்கு செவிகொடுத்து, அவரை நம்பி கீழ்ப்படிந்து அவரை ஆராதித்து வாழும் வாழ்க்கையாகும். அதின் விளைவு சிறப்பான வாழ்க்கை வாழ முடியும். பிரச்சனைகள், சவால்கள் இல்லாத வாழ்க்கை என்று சொல்ல முடியாது. ஆனால் தேவனுடைய சித்தத்தின் மத்தியில் வாழும் வாழ்க்கை என்று சொல்லலாம்! ●

வேதாகம ஹீரோ

ரேச்சல்

தெபோராள்

தெபோராள் என்பதற்கு “தேனீ” என்று பொருள். வேதத்தில் கூறப்பட்டுள்ள ஒரே பெண் நியாயதிபதி இவரே. தீர்க்கதரிசியாகிய இவர் போர்களத்திற்கு செல்ல தயங்கவில்லை. குடும்ப பெண்கள் கர்த்தருக்கென்று பணிபுரியவும், பணிபுரிய வேண்டும் என்பதற்கு இவர் ஒரு சவாலாக திகழ்கிறார்.

அறிமுகம்
கணவன் : லபிதோத்
வாழ்ந்த இடம் : கானான்
தொழில் : நியாயாதிபதி. தீர்க்கதரிசி. மபோர்வீரர்

வாசிக்க நியாயாதிபதிகள் 4 & 5 அதிகாரம்

நற்பண்புகள்

- தேவனுடைய வழிநடத்துதலை பெற்றவர்.
- தேவனுடைய வழிநடத்துதலுக்கு உடனடியாக கீழ்ப்படிகிறவர் தீர்க்கதரிசனம் உரைத்தது மட்டுமன்றி, போருக்கு செல்லும்படி பாராக்கை உற்சாகப்படுத்தினார்.
- பெண்கள் செல்லாத இடமான போர்க்களத்திற்கு விசுவாசத்தோடும் தைரியத்தோடும் சென்றார்.
- வெற்றி அடைந்ததால் கர்வம் கொள்ளாமல், கர்த்தருக்கு மகிமை செலுத்தினார். இஸ்ரவேலின் தாய் என்ற பேர் பெற்றார்.

சவால்கள்

- வேதத்தில் கூறப்பட்டுள்ள ஒரே பெண் நியாயாதிபதியும் தீர்க்கதரிசியுமான இவர் போர்க்களத்திற்குச் செல்வதற்குத் தயங்கவில்லை. பெண்கள் கர்த்தருக்கென்று பணி புரியலாம், பணிபுரிய வேண்டும் என்பதற்கு தெபோராள் ஒரு சவாலாகத் திகழ்கிறார்.
- தேவனுடைய வழிநடத்துதலை பெற்று, தேவ வழிநடத்துதலுக்கு உடனடியாகக் கீழ்ப்படிந்தவர்.
- தீர்க்கதரிசனம் உரைத்தது மட்டுமின்றி, போருக்குச் செல்லும்படி பாராக்கை உற்சாகப்படுத்தினார்.
- பெண்கள் செல்லாத இடமான போர்க்களத்திற்கு விசுவாசத்தோடும் தைரியத்தோடும் சென்றார்.

பலம் மற்றும் சாதனைகள்

மத்தியஸ்தர், ஆலோசகர், வழக்கறிஞர் போன்ற பல விசேஷ குணாதிசயங்கள் இருந்தது.

வழிநடத்தி செல்வதற்கான அழைப்பு வந்தபோது, திட்டமிடுவதற்கும், ஆலோசனை வழங்குவதற்கும், பொறுப்புகளை பகிர்ந்து அளிப்பதற்கும் தயாராக இருந்தாள்.

இஸ்ரவேலின் நான்காவது நியாயாதிபதி. முதல் பெண் நியாயாதிபதி தீர்க்கதரிசன வரம் வல்லமையாய் செயல்பட்டது. பாடல்களையும் எழுதினார்.

கற்றுக் கொள்ளும் பாடங்கள்

தேவன் தலைவர்களை நம்முடைய தரத்திற்கேற்ப பயன்படுத்துவதில்லை, அவருடைய தரத்திற்கேற்ப தகுதிப்படுத்தி பயன்படுத்துவார்.

ஞானமுள்ள தலைவர்கள் நல்ல உதவியாளர்களைத் தேர்ந்தெடுப்பார்கள் ●

டியூக் ரிச்சர்டு

வேண்டுதல் கேட்பவர்

IT கம்பெனியில் Break time என்றாலே friends discussion ஆரம்பிச்சிடுவாங்க. ஆனால் இன்னைக்கு ஏதாவது usefulஆன topic பேசலாமா என்று யோசிக்கும்போது, அன்றைக்கு lunch breakக்கு வந்தது Derry & Andrew மட்டும் தான்

ஆன்ட்ரூ: டேய் டெறி, ஏண்டா சோகமா இருக்கே?

டெறி: வீட்டில ஒரே pressure!

ஆன்ட்ரூ: ஏன், உன் வீட்டில தான் எல்லா வசதியும் இருக்கே?

டெறி: வீட்டுக்கு போனா அப்பாவும் சரி, அம்மாவும் சரி ஜெபம் பண்ணினியான்னு கேட்கிறாங்க? என்ன டா ஆன்ட்ரூ இது... ஜெபம், ஜெபம், ஜெபம்...

ஆன்ட்ரூ: டெறி, உங்க பெற்றோர் வேறே ஒண்ணும் கேக்கலியா?

டெறி: ஜெபம் பண்ணி என்ன ஆன்ட்ரூ நடக்கப் போகுது, ஏதாவது பிரயோஜனமா செஞ்சு ஏதாவது கத்துக்கிட்டா ஆபீஸ்ல பதவி உயர்வு கிடைக்கும். இதுல ஒண்ணுக்கும் வழி இல்லை. நாலு வார்த்தையை சொல்றதால என்ன பிரயோஜனம்,

ஆன்ட்ரூ: டெறி, ஜெபத்தை பற்றி நீ என்ன நினைக்கிறேன்னு சொல்லேன்.

டெறி: கடவுள்கிட்டே நம்ம தேவைகளை சொல்றதுதான் ஜெபம்... வேறென்ன இருக்கு அதுல?

ஆன்ட்ரூ: டெறி, ஜெபத்தை குறித்து நீ நினைச்சிருக்கிறது ஒரு சதவீதம் கூட இல்ல... prayer is a great weapon தெரியுமா உனக்கு. நீ நினைக்கிறத ஜெபத்தின் மூலமாக சாதிக்க முடியும்.

டெறி: எப்படி டா ஆன்ட்ரூ! வாயில பேசுகிற வார்த்தையால எப்படி சாதிக்க முடியும்?

ஆன்ட்ரூ: ஒரு countryல ஒரு king இருக்கிறார், அந்த நாட்டில இருக்கிறவங்க ராஜாவினிடத்தில் ஒரு காரியத்தை கேட்கிறாங்க, அதற்கு அவர் ஓகே.. சொல்லிட்டா அந்த காரியம் நடக்குமா? நடக்காதா?

டெறி: நடக்கும்! 100% கண்டிப்பா நடக்கும்!

ஆன்ட்ரூ: ஏன்?

டெறி: அந்த நாடே அவருக்குத்தான் சொந்தம், அதனால ராஜா என்ன சொன்னாலும் நடக்கும்.

ஆன்ட்ரூ: ஒரு நாட்டோடே அதிபதி சொன்னா நடக்கும் என்று நீ சொல்ற, அப்ப உலகத்தையே படைச்சவர் ஒரு வார்த்தை சொன்னா நடக்குமா? நடக்காதா?

டெறி: நடக்கும்! என்ன ஆன்ட்ரூ ஜெபத்துக்கும் இதுக்கும் என்ன சம்மந்தம் இருக்கு?

ஆன்ட்ரூ: இருக்கு... நாம் ஜெபம் யாருகிட்ட பண்றோம்?

டெறி: இந்த உலகத்தையே படைத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் பண்றோம்...

ஆன்ட்ரூ: அவர் என்ன சொல்றார் தெரியுமா, "**இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்**" (யோவான் 16:24).

டெறி: ஒரு மாதம் ஜெபித்து gap விட்டு மறுபடியும் ஜெபம் பண்ணினாலும் இயேசு கிறிஸ்து கேட்டு பதில் கொடுப்பாரா?

ஆன்ட்ரூ: ஆமா, ஆனால், அதில் ஒரு முக்கியமான காரியம் இருக்கு.

டெறி: என்ன ஆன்ட்ரூ?

ஆன்ட்ரூ: உனக்கு ஒண்ணு வேணும்னா, யாருகிட்ட உரிமையாய் கேட்பே, உங்க அப்பாகிட்டயா அல்லது பக்கத்து வீட்டு அங்கிள் கிட்டயா?

டெறி: அப்பாகிட்டதான் கேட்பேன் ஆன்ட்ரூ. பக்கத்து வீட்டுல கேட்டா எப்படி கிடைக்கும்?

ஆன்ட்ரூ: இதேபோல தான் இயேசுவை யாரெல்லாம் அப்பாவா ஏற்றுக்கொண்டு ஜெபம் பண்ணுகிறார்களோ, அவங்க ஜெபத்திற்கு உடனே பதில் கிடைக்கும்.

டெறி: எனக்கு எங்க அப்பா இருக்கும்போது, நான் எப்படி இயேசுவை அப்பாவா ஏற்றுக்கொள்ள முடியும்?

ஆன்ட்ரூ: டெறி, உன்னையும் உங்க அப்பாவையும் படைத்தது இயேசு கிறிஸ்துதான், உனக்கும் இயேசு அப்பா தான், உங்க அப்பாவுக்கும் இயேசு அப்பா தான்.

டெறி: ஆனா என்னால அப்படி யோசிக்க முடியலையே! நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தாலும், எனக்கும் அவருக்கும் ஒரு பெரிய attractionம் இல்லை, involvementம் இல்லை.

ஆன்ட்ரூ: அதுக்கு காரணம், உனக்கும் ஆண்டவருக்கும் உள்ள gap தான். பெயரில் கிறிஸ்தவம் இருப்பது அல்ல, வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து இருக்க வேண்டும். நமக்கும் இயேசுவுக்கும் ஒரு encounter ஏற்பட்டிருக்க வேண்டும். அதாவது நம்முடைய பாவத்தை அறிக்கை செய்து அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்ட இரட்சிப்பின் அனுபவம் வேண்டும். அதுதான் அந்த உறவை உனக்கும் இயேசப்பாவுக்கும் கொடுக்கும். நமக்குள் உள்ள பாவம் தான், அந்த பாவம் தான் இயேசுவிடம் போகவிடாம தடுக்குது. ஏசாயா 59:2ல் இப்படி சொல்லப்பட்டிருக்கிறது. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. அதனாலதான் நம்மால இயேசு கிறிஸ்துவை உரிமையா அப்பான்னு கூப்பிட முடியல, அப்பா பிதாவே என்று அழைக்கும் புத்திரசுவிகாரத்தை அவர் நமக்கு தந்திருக்கிறார் என்று ரோம ருக்கு எழுதும்போது பவுல் கூறுகிறார். நமக்குள் இருக்கிற கோபம், எரிச்சல், சண்டை, தவறான எண்ணங்கள், இச்சைகள், பொறாமை, பெருமை போன்ற பாவக் காரியங்கள் நமது அப்பாவாகிய இயேசு கிறிஸ்துவிடம் சேர விடாமல் நம்மை தடுக்குது. அதனாலதான் சிலநேரம் ஜெபம் என்றாலே வெறுப்பா இருக்கு.

டெறி: இத மாத்தணும்னா நான் என்ன செய்யணும் ஆன்ட்ரூ?

ஆன்ட்ரூ: சிம்பிள், நான் சொல்ற மாதிரி நீ செஞ்சா போதும். நீ என்னவெல்லாம் பாவம் செய்த என்பதை யோசிச்சு பார். பின் இயேசுவே, நான் இன்ன இன்ன பாவம் எல்லாம் செய்திருக்கிறேன் நான் ஒத்துக்கொள்கிறேன் என்னை மன்னிங்க, இனிமே பாவம் செய்ய மாட்டேன், உம் இரத்தத்தால என்னை கழுவுங்க, உங்க பிள்ளையாக என்னை மாற்றி, ஏற்றுக் கொள்ளுங்க அப்படின்னு முழு இருதயத்தோடு ஜெபம் பண்ணு. உடனே, இயேசு உன் பாவங்களை மன்னித்து, உன்னை தன்னுடைய பிள்ளையா ஏற்றுக்கொள்வார். அதன்பின் உன் சிந்தையில் ஒரு மாற்றம் உண்டாகும். நீ எதுவெல்லாம் இயேசு அப்பாகிட்ட கேட்கிறியோ அதெல்லாம் அவருடைய சித்தத்தின்படி தருவார்.

டெறி: அதென்ன சித்தம் ஆன்ட்ரூ! புதுசா ஒரு புதிர்...

ஆன்ட்ரூ: பெற்றோர் சிறு பிள்ளை கையில கத்தியை கொடுப்பார்களா?

டெறி: இல்ல...

ஆன்ட்ரூ: ஆனா அந்த பிள்ளை வளர்ந்தபிறகு பெற்றோரே அந்த கத்தி யை எடுத்து தா என்று சொல்வாங்க. ஏன்னா, எந்த நேரத்தில் எதை செய்தா பிள்ளைக்கு பிரயோஜனம் என்பதை அறிந்து செய்வாங்க. அதுபோலதான் நீ கேட்கிற காரியம் சரியானதாக இருந்தால், உடனே இயேசு தந்துருவாங்க, இல்ல கொஞ்சம் பக்குவமடையணும் அப்படின்னா Wait அப்படின்னு சொல்லுவார். நமக்கு தேவை இல்லை அப்படின்னா Noன்னு சொல்லுவார்.

டெறி: என்ன ஆன்ட்ரூ, இயேசு பேசுவாங்கன்னு சொல்றே? அது உண்மையா?

ஆன்ட்ரூ: ஆமாம், டெறி இயேசு நாம ஏறெடுக்கிற ஒவ்வொரு ஜெபத்திற்கும் பதில் தருவாங்க. நம்முடைய மனசாட்சியின் மூலமாக பேசுவாங்க, வேதவசனம் மூலமா பேசுவாங்க, சொப்பனத்தின் மூலமா பேசுவாங்க, தரிசனம் மூலமா பேசுவாங்க, சிலநேரம் நாம் ஜெபம் பண்ணும்போது நேரடியா கூட பேசுவாங்க. ஜெபம் என்பது, நாம் ஏறெடுக்கிற விண்ணப்பம் மாத்திரம் அல்ல, அதற்கான விடையும் சேர்த்துதான்.

டெறி: இவ்வளவு விஷயம் இருக்கா டா ஆன்ட்ரூ! இன்னும் வேற ஏதாவது இருக்கா ஆன்ட்ரூ!

ஆன்ட்ரூ: ஆமா டெறி! நாம இயேசு கிறிஸ்துவின் வல்லமையை விசுவாசித்து, அவருடைய நாமத்தில், அதாவது இயேசுவின் பெயரிலே மலையை பார்த்து பெயர்ந்துபோ அப்படின்னு சொன்னா, அது நடக்கும். இதுவும் ஒருவித மான ஜெபம்தான். முதலில் ஜெபத்தை பற்றி சொல்லும்போது weapon என்று சொன்னேனே அதுதான்.

ஆன்ட்ரூ: இதுமாத்திரமல்ல, சிலர் பெரிய காரியத்திற்குதான் ஜெபம் பண்ணணும் அப்படின்னு நினைப்பாங்க. அது தப்பு. சின்னதோ, பெரியதோ எதற்காக நாம் ஜெபம் பண்ணினாலும் நமக்கு விடை கிடைக்கும்.

டெறி: ஆன்ட்ரூ, யார் ஜெபம் பண்ணினாலும் அற்புதம் நடக்குமா?

ஆன்ட்ரூ: ஜெபம், ஒரு தகப்பனிடம் பிள்ளை கேட்பது. இதுல எந்த ஒரு பாகுபாடும் கிடையாது. நீ எப்போ இயேசுவின் பிள்ளையா மாறிட்டியோ, அப்பவே நீ ஜெபம் பண்ணினா பிசாசுகள் ஓடும், வியாதிகள் சுகமடையும், இன்னும் அற்புதங்கள் நடக்கும்.

டெறி: ஆன்ட்ரூ நான் நிறைய நேரம் சர்ச்சில் ஜெபம் பண்ணுகிறவர்களை கேலி செய்தேன். ஏன் நம் ஆபீஸ்ல நடக்கும் ஜெபத்தைக்கூட நான் கிண்டல் பண்ணியிருக்கேன். ஆனால் ஜெபம் என்றால் என்ன, அதன் வீரியம் என்ன என்பதை இப்போது கற்றுக்கொண்டேன். இனி ஜெபத்தை எவ்வளவு Bore அடிச்சாலும் நிறுத்தாமல் செய்வேன். என் பிரச்சனை எல்லாம் ஜெபத்தினால் ஜெயிப்பேன்

ஆன்ட்ரூ: ரொம்ப Thanks! ●

வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில்
மிகுந்த மாற்றத்தைக் கொண்டுவரும் இப்பத்திரிகையை
நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தப்பின் இப்பத்திரிகையை
உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!

30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

சந்தா விபரம்

தனிப் பிரதி ₹ 10 | ஆண்டு சந்தா ₹ 100 | ஆயுள் சந்தா ₹ 1000

விசுவாச ஜெபம்



ஜார்ஜ் முல்லர் விசுவாசத்தில் சிறந்த ஜெப வீரர். இங்கிலாந்து தேசத்தில் இரண்டாயிரம் ஏழை மாணவர்களுக்கான ஓர் விடுதியை நடத்தி வந்தார். அவருடைய விசுவாச ஜெபத்தின் மூலமாக தொடர்ந்து பணம் கிடைக்கப் பெற்று அவ்விடுதியை நடத்தி வந்தார். ஒருநாள் காலை நேரம் விடுதியின் உணவு அறையின் மேஜையின்மீது உணவு தட்டுகளும், குவளைகளும்

ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்தன. மேஜையின் மீதிருந்த பாத்திரங்கள் வெறுமையாகக் காணப்பட்டன. ஜார்ஜ் முல்லரிடம் பணமும் இல்லை. உடனே அவர் முழங்காற்படியிட்டு, “தேவனே நீர் எங்களுக்கு உணவுக் கொடுக்கப் போவதற்காக நன்றி செலுத்துகிறேன்” என்றார். கேரீத் ஆற்றங்கரையில் எலியாவிற்கு உணவளித்த கர்த்தர் ஜார்ஜ் முல்லரின் ஜெபத்தைக் கேட்டு அந்த விடுதியில் தங்கியிருந்த பிள்ளைகளுக்கு உணவளித்தார்.



ஒரு ரொட்டிக் கடைக்காரன் உள்ளே வந்து, “**ஐயா இரவில் தூக்கமின்றி தவித்துக் கொண்டிருந்தேன், ஆண்டவர் உங்கள் விடுதி பிள்ளைகளுக்கு உணவளிக்கும்படி உணர்த்தினார். உடனே நான் புதிதாக ரொட்டிகளை ஆயத்தம்பண்ணிக் கொண்டு வந்திருக்கிறேன்**’‘ என்றார். ஜார்ஜ் முல்லர் அவருக்கு நன்றியை தெரிவித்ததோடு, தன் ஜெபத்திற்கு பதிலளித்தவரைத் துதித்தார். அநேக கிறிஸ்தவர்கள் இன்று ஜெபிப்பதில் பின்தங்கி இருக்கிறார்கள். ஆண்டவருக்கு என் தேவை என்ன என்று தெரியும், பின் நான் ஏன் கேட்க வேண்டும்? என சிலர் நினைக்கின்றனர். ஒருசிலருக்கு ஜெபித்தால் பலன் கிடைக்கும் என்ற விசுவாசமே இல்லை. ஆனால், நம் ஆண்டவர் ஜெபத்தை கேட்கிற ஆண்டவர். சில சமயம் சற்று தாமதமாகவும் நம் ஜெபத்திற்கு

பதிலளிப்பார். நாம் விசுவாசத்துடனும், பொறுமையுடனும் காத்திருக்க வேண்டும். எதை எப்பொழுது எப்படி கேட்க வேண்டும் என்பதை அவர் முடிவு செய்கிறார். நியாயமான அவசரமான வேண்டுதல்களுக்கு அவர் உடனடியாக பதிலளிக்கிறார்.

ஆம் வாலிபர்களே! நாமும் விசுவாசத்தோடு கர்த்தரிடம் ஜெபித்தால், ஜெபத்தைக் கேட்கிற தேவன் நம்முடைய ஜெபத்தைக் கேட்டு அற்புதம் செய்வார்! ●

வாலிபர் எழுப்புதல் உபவாச முகாம்

கர்த்தரின் பெரிதான கிருபையினால் ஜீன் 1ம் தேதி "ஆசீர்வாதமான சென்னை" சார்பாக இளம் வாலிபர்கள் மற்றும் வாலிபர்களுக்கான சிறப்பு உபவாச ஜெபம் சென்னை இராயப்பேட்டை ஷூனிளீபு மைதானத்தில் வைத்து நடைபெற்றது. சென்னை மற்றும் சென்னையை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து சுமார் 3000 வாலிபர்கள் கலந்துகொண்டு காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை தேசத்திற்காக உபவாசித்து ஜெபித்தார்கள். நிகழ்ச்சிகள், ஜெபங்கள் அனைத்தையும் இயேசு விடுவிக்கிறார் வாலிபர் மற்றும் இளம் வாலிபர் ஊழியக் குழுவினார் நடத்தினார்கள். இக்கூடுகையில் கலந்துகொண்ட வாலிபர்கள் தேசத்திற்காக ஜெபிக்கவும், சுவிசேஷம் அறிவிக்கவும் மற்றும் இயேசுவுக்கு சாட்சியாக வாழ்வேன் என்கிற தீர்மானத்துடன் கடந்து சென்றனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/81-A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

வாலிபர் கொண்டாட்டம்

ஜூலை 21
4-8 pm

வேலூர் மாவட்டம்

ஆற்காட்டில்....

காமராஜர் திருமண மண்டபம்,
அமீன்பிரான் தர்கா தெரு, ஆற்காடு
(நகராட்சி அலுவலகம் அருகில்)

சகோ. **அவினாஷ்**

9629730179 | 9442885315

ஜூலை 28
5-8 pm

கன்னியாகுமரி மாவட்டம்...

திங்கள்சந்தையில்...

CSI Community Hall
நெய்யூர்

சகோ. **சாம் ஜெபராஜ்**

9865189883 | 7598155503

பாளையங்கோட்டையில்

August 15th வியாழக்கிழமை

காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை

தூய யோவான்
மேல்நிலைப்பள்ளி மைதானம்
பாளையங்கோட்டை

9442493250/9486233314/9488212915

செய்தி:
சகோ. மோகன் சி. லாசரஸ்

செய்தி:
சகோ. **சகோ. டேவிட் கணேசன்**

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2017-2019.
Date of Publication: 25-06-2019.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2017-2019.

நாலுமாவடி தேவனுடைய கூடாரத்தில்...

2019
ஆகஸ்ட்
16
17
18

3 நாட்கள்

சேனை

வாலிபர் தலைமைத்துவ பயிற்சி முகாம்

வயது வரம்பு : 17-35 பதிவுக் கட்டணம் 200/-

குறிப்பு: இரட்சிப்பின் அனுபவம் இருக்க வேண்டும்.
ஊழியம் செய்ய வாஞ்சையுள்ளவர்கள் மட்டும்!

பயிற்றுவிப்போர்

சகோ. மோகன் சி. லாசரஸ் | சகோ. அப்பாத்துரை | சகோ. சாம் ஜெபராஜ்

இம்முகாமில் பங்குபெற விரும்புவோர் பெயர், வயது, விலாசம், தொலைபேசி எண்,
உங்களுக்கும் தேவனுக்கும் உள்ள உறவு? இரட்சிப்பின் அனுபவம்? ஊழிய அனுபவம்?

மேலே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு நான்கு வரிகளில் பதில் எழுதி e-mail
(youth@jesusredeems.org) மூலமாகவோ,
கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு கடிதம் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்!

விண்ணப்பப் படிவம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் **ஜூலை 30, 2019**

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம், நாலுமாவடி – 628 211, தூத்துக்குடி மாவட்டம்

jesusredeems.com/senai/என்ற இணையதளத்திலும் பதிவு செய்யலாம்

மேலும் விவரங்களுக்கு: **9750955548/ 9750955549/ 9442885315 / 04639-220022**